நாமத்தைப் பல குடும்பங்களில் பாராயணம் செய்து வருகிருர்கள்; அர்ச்சனேயும் செய்து வருகிருர்கள். அவர்களுடைய பக்தியின் ஆர்வம் பாராட்டற்கு உரியதே! ஆனுல், உரிய முறைப்படி மந்திரோபதேசம் பெருதவர்கள், லலிதா சஹஸ்ர நாமத்தைப் பாராயணம் செய்யக் கூடாது என்பது மிகப் பலருக்குத் தெரியாது. லலிதா சஹஸ்ர நாமம் என்பது வெறும் ஸ்தோத்திரம் அல்ல; அதில் வருகிற ஆயிரம் நாமாக்களும் ஆயிரம் மந்திரங்கள்!

எனவே, சஹஸ்ரநாம பாராயணம் செய்வதற்கோ, மந்திர ஜெபம் செய்வதற்கோ ஆசைப்படுகிறவர்கள், முதலில் ஒரு குருவைத் தேடிக் கொள்ள வேண்டும். ஆனுல், தகுதி உள்ளவர்களைக் குரு, தாஞகவே தேடி வருவார்! சந்தேகமில்லை!

வெளியிடுபவரும், ஆசிரியரும் இராம. மணிமேகலே 4. தணிகாசலம் செட்டி ரோடு, சென்னே-17. அச்சிடுபவர்: கொண்டா. காசி. சீதாராமன், ராமன்ஸ் பிரிண்டிங் பிரஸ், 81-5 பாண்டிபஸார், தியாகராயநகர், சென்னே-17.

ஓம்

அருள்

மாத இதழ்

விலை 30 காசு

ஆசிரியர்:
திருமதி
தமிழ்வாணன்







தென்னாட்டில் சிறந்
தெய்விகப்பத்திரி

சுலபமானது!

தவணைகளில் வாங்குவது!



murphy radio
Delights the home!

LARGEST SELLERS OF BRANDED ARTICLES

வி. ஜி. பன்னீர்தாஸ் & கோ.,

சைதாப்பேட்டை :: சென்னை-15.

போன் : 442333 - 442334


புரட்சிநடிகர் எம்ஜிஆர்
அளிக்கும்
ஜேயார் மூவீஸ்
புதியபூமி
டைரக்ஷன்
சாணக்யா
தயாரிப்பு
P.K.V. சங்கரன்-ஆறுமுகம்
வசனம்: தென்னரசு
இசை: M.S. விஸ்வநாதன்
ஒளிப்பதிவு: P.N. சுந்தரம்
திரைக்கதை: குகநாதன்
NEGATIVE RIGHTS
CONTROLLED BY
JAYANTHI FILMS
(M) PRIVATE LTD, MADRAS-34
SEMBI
சென்னை குளோப் · ஸ்ரீ கிருஷ்ணு மேகலா · நூர்ஜஹான் மற்றும் தென்னகமெங்கும்

அருள்

தமிழ் மாத முதல் நாள் வெளிவருகிறது

இந்த இதழில்

அருள்-2 ஜூலை

கருணை-10 15-7-68

ஆடி, கீலக விலை: 30 காசு



காந்தி

சொன்னவை!

தொகுப்பு:
மேவானி கோபாலன்

• அபாயத்திற்குப் பயந்து நமக்கு நெருக்கமானவர்களை நிரந்தரமாக விட்டு விட்டுக் கோழைத்தனமாக ஓட என் அஹிம்ஸை இடம் தரவில்லை. ஹிம்ஸை, கோழைத்தனம்— இந்த இரண்டில் ஹிம்ஸையைத் தான் நான் விரும்புவேன். என்ஞல் அஹிம்ஸையைப் புகட்ட முடியாது. அது அழகிய காட்சிகளைக் கண்டு அனுபவிக்கும்படியாக ஒரு குருடனைத் தூண்டுவதைவிடக் கஷ்டமான காரியம்.

• பல வருஷங்களாக நான் கோழையாக இருந்தேன். அப்போது ஹிம்ஸையைக் கைக்கொண்டேன்; என் கோழைத்தனத்தை உதறிவிட்ட மாத்திரத்தில் நான் அஹிம்ஸையைக் கடைப்பிடிக்கத் தொடங்கினேன்.

• நான் அஹிம்ஸை என்ற சாஸ்திரத்தைத் துருவித் துருவிப் பார்க்கும் ஓர் ஏழை ஆராய்ச்சியாளன். கண்ணுக்குத் தென்படாமல் மறைந்திருக்கும் அதன் ஆழங்கள் என் சக ஊழியர்களைத் தடுமாறச் செய்வதைப்போலவே என்னையும் சில சமயங்களில் தடுமாறச் செய்கின்றன.

• என் சொந்த நம்பிக்கையை நான் மற்றவர்கள் மீது சுமத்த மாட்டேன்; அதிலும் ஒரு தேசிய ஸ்தாபனத்தின் மீது ஒருபோதும் சுமத்தமாட்டேன். ஆனுல் என் நம்பிக்கையின் அழகையும் பயனையும் மனதில் படும்படியாக நான் நாட்டு மக்களுக்கு எடுத்துச் சொல்லுவேன்.

• தர்க்கத்தின் மூலம் மட்டும் உலகம் ஆளப்படுவதில்லை. வாழ்க்கையே ஒரு மாதிரியான ஹிம்ஸைக்கு இடம் தரத்தான் செய்கிறது. அதனுல் குறைந்த ஹிம்ஸையுள்ள வழியை மட்டுமே நாம் தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும்.

• இந்தியாவிற்கும், மனித சமூகத்துக்கும் ஊழியன் என்று என்னைச் சொல்லிக் கொள்ளுகிறேன். இந்த ஊழியத்திலேயே சாவதற்கு நான் விரும்புகிறேன். புதியதொரு மதத்தை ஸ்தாபிக்க நான் விரும்பவில்லை.

• என்னுடைய மதம் சிறைச்சாலை மதமன்று. தெய்வ சிருஷ்டியில் கடைசி ஸ்தானத்தில் உள்ளவற்றிற்கும் கூட என் மதத்தில் இடம் உண்டு. ஆனுல், அவ

மரியாதை, இனத்திமிர், மதத் திமிர், நிறத் திமிர் முதலியவை அதில் பிரவேசிக்கவே முடியாது.

• இந்தியாவிற்கும், மனித சமூகத்துக்கும் ஊழியனான நான் மறு உலகத்தில் இந்துக்கள் என்றும், கிருஸ்தவர்கள் என்றும், முஸ்லிம்களென்றும் கிடையாதென்று நம்புகிறேன். அங்கே அவர்களுடைய விலாசங்களும் உத்தியோகங்களும் கவனிக்கப் பாகுபாடு கிடையாது. அவர்களுடைய செயல்களுக்கேற்றவாறுதான் அங்கு நியாயத் தீர்ப்புச் செய்யப்படும்.

• ஒவ்வொரு மதத்தையும் அந்தந்த மதஸ்தர்களின் கண் கொண்டு பரிசீலனை செய்து பார்க்கும்படி நான் ஜனங்களைக் கேட்டுக்கொள்கிறேன். நான் கனவு காணும் இந்தியா ஒரே ஒரு மனப்பக்குவமான மதத்தை மட்டும்—அதாவது இந்துமதம், கிருஸ்துமதம், இஸ்லாமிய மதம் போன்ற ஏதேனும் ஒரே ஒரு மதத்தை மட்டும்வளர்ப்பதன்று. அந்த இந்தியாவில் எல்லா மதங்களும் பரஸ்பரம் சகிப்புத் தன்மையுடன் வாழ்ந்து வரும்.

• அஹிம்ஸா பேதத்தைக் கொண்டுள்ள இந்துமதம் எனக்கு உலகத்திலேயே மிகச் சிறந்த மதமாகத் தோன்றுகிறது. என் மனைவி எனக்கு உலகத்திலேயே அழகான பெண்ணாகத் தோன்றுவது போல, என்னைப்போல் ஒவ்வொருவரும் அவரவர்கள் மதத்தைப் பற்றிக் கருதலாம்.

—நன்றி: குடியரசு



கிங் மறையவில்லை!

கோவை மகேசன்

வானம் இடிந்து விழும்!

பயங்கரப் பேய்க்காற்று வீசும்!

பிரளயம் தோன்றும்!

பூமி நடுங்கும்!

தூயவன் ஒருவன் தொல்லைப் படும் போது மேலே சொன்ன அத்தனையும் நிகழுமென்று சிலர் கூறுகிறார்கள்.

அப்படிச் சொல்பவர்கள் அறிவிலிகள்.

அவர்கள் சொல்வதை நான் நம்பமாட்டேன்!

அவர்கள் சொல்வது உண்மையாக இருந்தால், இம்மாதம் 4-ம் திகதி இவை அத்தனையும் நடந்திருக்க வேண்டுமே!

ஏன் நடக்கவில்லை?

டாக்டர் மார்ட்டின் லூதர் கிங்கைவிட ஒரு தூயவன் உலகிலே இருக்க முடியுமா?

அத் தூயவன்-காந்தியாரின் தத்துவத்தைக் கடைப்பிடித்த கற்றறிவாளன். பதை பதைக்க துடிதுடிக்க வெறி பிடித்த வெள்ளையனால் சுட்டுக்கொல்லப் பட்டானே, அப்போது இவைகள் எல்லாம் நடந்திருக்க வேண்டாமா?

உலகத்தில் வாழும் நல்லவர்களின் கண்களில் எல்லாம் அழுது அழுது கண்ணீர் வற்றிவிட்டது.

இனி அழுவதற்குக் கண்களில் நீரில்லை!

உரிமைகளுக்காகப் போராடிக் கொண்டிருக்கும் ஒடுக்கப்பட்ட மக்களின் நாடி நரம்புகளெல்லாம் இன்று துடித்துக்கொண்டிருக்கின்றன!

தனது சமூகத்தின் உரிமைகளுக்காகச் சத்திய நெறியிலே போராடி உயிரைவிட்ட டாக்டர் கிங் பற்றி எதை எழுதுவேன்?

பேனாவைத் தூக்கினால் கைகள் நடுங்குகின்றன.

யேசுநாதர் எந்த லட்சியத்துக்காகச் சிலுவையில் உயிரைவிட்டாரோ,

காந்தியடிகள் எந்தக் கொள்கைக்காக இன வெறியனால் சுட்டுக் கொல்லப்பட்டாரோ,

ஆபிரகாம் லிங்கனும் கென்னடியும் எதற்காகத் தங்கள் உயிரைப் பணயம் வைத்தார்களோ,

அதே இலட்சியங்களுக்காகத் தனது உயிரையும் கொடுத்துவிட்டார் கறுப்புக் காந்தியான லூதர்.

வெள்ளை இனவெறியே! லூதரின் உயிரைக் குடித்த பின்னராவது உனது வெறி அடங்கிவிட்டதா ?

இல்லை, இன்னும் வேறு யாரையேனும் குறி பார்த்துக் கொண்டிருக்கிறாயா?

லூதரைக் கொன்றுவிட்டதன் மூலம் நீ புத்திசாலியென்று எண்ணிக்கொண்டிருக்கிறாய்.

ஆனால் உன்னைப் படு முட்டாளென்று நான் சொல்லுகிறேன்.

இனி அமெரிக்காவின் மூலை முடுக்குகளிலெல்லாம் வெறி கொண்ட வேங்கைகளாகத் திரியப் போகிறார்கள் நீக்ரோக்கள்.

அவர்களைக் கட்டுப்படுத்தி அகிம்சை வழியிலே நடத்திச் சென்ற லூதரைத்தான் சுட்டுத் தள்ளிவிட்டீர்களே!

ஆம், லூதரைச் சுட்டுத் தள்ளியதன்மூலம் தங்களுக்குத் தாங்களே அழிவு தேடிக்கொண்டுவிட்டனர் இனவெறியர்கள்.

அமெரிக்காவில் எரிமலைவெடிக்கத் தொடங்கிவிட்டது! இந்த எரிமலைக்குள் சிக்கி வெள்ளை இன வெறி தூள் தூளாகப் போகிறது!

நாகரிகத்தின் உச்சியில் நிற்பதாகப் பெருமைப்படும் அமெரிக்கர்களே!

உங்கள் அநாகரிகத்தைக்கண்டு உலகே கொதிப்படைந்து இருக்கிறது.

இதிலிருந்து நீங்கள் விடுபட வேண்டுமென்றால், லூதரின் இலட்சியக் கனவுகளை நனவுகளாக்குங்கள்.

அப்பொழுதுதான் உங்கள்மீது விழுந்த அழியாத கறையைத் துடைத்தவராவீர்கள்.

லூதரைச் சுட்டுத் தள்ளிய இன வெறியன் ஒரே ஒரு நன்மையைச் செய்துவிட்டான்.

லூதர் அமெரிக்காவில் நீக்ரோக்கள் மத்தியில் மாத்திரமே இதுவரை இருந்து வந்தார்.

இனி விடுதலை உள்ளம் கொண்ட குடும்பங்கள் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு மார்ட்டின் லூதர் கிங் தோன்றுவார்!

பிறக்கப்போகும் குழந்தைகளில் ஒன்றுக்காவது தியாகத் திருமகன் கிங்கின் பெயரை ஒவ்வொரு குடும்பத்தினரும் சூட்டுவார்கள்.

இனவெறியை எதிர்த்து எங்கெங்குப் போராட்டங்கள் நடத்தப்படுகின்றனவோ அங்கெல்லாம் லூதர் ஆதர்ச புருஷராக இருந்து இனி வழி காட்டிக் கொண்டிருப்பார்.

—சுதந்திரன்

உ

திருச்சிற்றம்பலம்

புல்நுனிமேல் நீர்போல்
நிலையாமை என்றெண்ணி
இன்னினியே செய்க
அறவினை—இன்னினியே
நின்றான் இருந்தான்
கிடந்தான்தன் கேள் அலறச்
சென்றான் எனப்படுதலான்.

இன்றுகொல் அன்றுகொல்
என்றுகொல் என்னாது
பின்றையே நின்றது
கூற்றம் என்றெண்ணி
ஒருவுமின் தீயவை
ஒல்லும் வகையால்
மருவுமின் மாண்டார் அறம்.

—நாலடியார்



ஸ்ரீ அரவிந்தரின் யோகம் ★

திரு. தி. வி.
கபாலி சாஸ்திரிகள்

ஸ்ரீ அரவிந்தரது போதனைகளில் அக்கறை கொண்டவர்களிடமிருந்து யதார்த்தமாகக் கேள்விகள் எழுகின்றன; அடிக்கடி நாம் அவைகளுக்கு விடையளிக்க வேண்டியிருக்கின்றது.

ஸ்ரீ அரவிந்தரது யோகம் எதைக் குறிக்கோளாகக் கொள்கின்றது? அதன் இலட்சியத்திலோ அல்லது பழகும் வழியிலோ புதிதாக என்ன இருக்கின்றது? அந்த உன்னத ஸத்தியம் அல்லது தெய்வம் ஒன்றுதான் என்பது உண்மையானால், அதைக் காணப் பலவேறு வழிகள் இல்லையா? நம் ஞாபகம் கடந்த காலம் தொட்டு முனிவர், ரிஷிகளிடமிருந்து தலைமுறையாக வந்த அத்யாத்ம சாதனை மார்க்கங்கள், நன்கு தெரிந்தவை பல இருக்கின்றனவே — இவை ஒன்றினாலும் கிடைக்கக் கூடாததையா பூரண யோகம் சாதிக்க முற்படுகின்றது? ஏன், நமது யுகத்திலேயே, சமீப காலத்தில், தக்ஷிணேச்வரத்தின் அவதார புருஷர் ஓர் உன்னத உண்மையைத் தானும் வாழ்ந்து பிறர்க்கும் உபதேசிக்கவில்லையா? அதாவது, எல்லா யோகங்களும், மதவழிபாட்டின் எல்லா முறைகளும், ஒரே இலட்சியத்திற்கு அழைத்துச் செல்லும் வெவ்வேறு பாதைகளே. அப்படியிருக்க, பல்வேறு பாதைகளையும் விதவித யோகங்களையும் ஒருமைப்படுத்த வேண்டும் என்று ஏன் இங்கு இவ்வளவு அழுத்தமாகக் கூறப்படுகின்றது? ஏனெனில் அவை ஒவ்வொன்றுமே அவ்வுயர்தர உண்மை, ஆத்மா அல்லது தெய்வம், அதை அனுபவத்தில் அறிவதையே தன்முடிவான இலட்சியமாகக் கொண்டுள்ளனவே. ஒரே வழியை முழுதும் பின்பற்றினால் அதுவே முடிவில் உண்மைக்கு அழைத்துச் செல்லப் போதாதா?

அது தவிர. கேவலப் பிரும்மத்தைப் பற்றிய வேதாந்த உண்மைக்கு அழைத்துச் செல்லும்

---

* ஸ்ரீ அரவிந்தரின் போதனை விளக்கம் என்ற நூலில் ''அதிமனத்தின் ஸாதனை'' என்ற அத்தியாயத்தின் தமிழாக்கம்.

ஞான மார்க்கம் இருக்கின்றதே பிரும்மம். அத்வைதம், ''இரண்டற்ற ஒன்று'' பற்றியுள்ள உபநிடத வாக்கியங்களுக்குச் சான்றாக நின்ற முனிவர் நூற்றுக் கணக்கில் இல்லையா? இதே உண்மையை ஸ்ரீ சங்கராச்சாரியர் மிகத் திறமையுடன் திரும்ப உரைத்துத் தம் சித்தாந்தத்தில் நிலை நிறுத்தியுள்ளாரே பக்தரும் முனிவருமான ஆழ்வார்களின் வாழ்க்கை, பக்தியாலும் சரணாகதியாலும் ஏற்பட்ட தெய்வானுபவங்களின் செறிவுக்கு அத்தாட்சியல்லவா? அதைத் தானே பிந்நாளில், ஸ்ரீ ராமானுஜர் இலட்சியத்தை அடையச் சிறந்த ஒரே வழி எனக் கண்டு தெளிந்து முடிவு செய்தார்? கௌராங்க மஹாப்பிரபுவின் வாழ்வில் வெளிப்பட்டதுபோல் இணையற்ற தெய்வக்காதலும் பக்தியும் நிரம்பிய வாழ்வை உலகனைத்திலும் நாம் எங்குக் காண முடியும்? இந்தப் பௌதிக உடலையும் அதன் விருத்திகளையும் அடக்கி ஆளவேண்டுமானாலும், இயல்பாய் ஏற்பட்ட கால வரையை மீறி மனித வாழ்வை நீடிக்கச் செய்ய வேண்டுமானாலும் கூட, கைதேர்ந்த தாந்திரிக ரச சித்தர்கள் வழி வகுத்துள்ளனர். தென் இந்தியாவின் சித்தர்களும், சைவரும், சாக்தரும் பிரபலம் வாய்ந்தவர்கள்; தங்கள் யோக சாதனைகளில் ஞானத்தையும் பக்தியையும் ஒன்றாய்ச் சேர்த்தவர்கள்; வாழ்வின் பெரும் பயனை அனுபவித்து உணரத் தகுதியாகும் வரை, இவ்வுடல் இயந்திரத்தைப் பழுதில்லாமல் பாதுகாக்கத் தற்கால சாந்தியாக மருந்துச் சரக்குகள் என்னும் உபாயத்தைக் கைக்கொள்ளுபவர்கள்.

இக் கேள்விகளும் இன்னும் இதே வகையைச் சார்ந்தவைகளும் வெறும் ஆவல் காரணமாக, ஓர் ஏளனம் செய்யும் மனப்பான்மையுடன் வெளிக்கிளம்பினால், இவைகளுக்கு விடையளிக்க முற்படுவது வீண். ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லாத பேச்சு என்று விட்டுவிடலாம். ஆனால் யோகத்தில் உண்மையான அக்கறை கொண்டு, ஸ்ரீ அரவிந்தரது போதனைகளால் கவரப்பட்டு, அத்யாத்ம வாழ்வில் ஆர்வமுள்ளோர் உளர். அவர்களிடம் ஆர்வத்திற்குக் குறைவில்லை. ஆனால் அச்சில் வெளிவந்த அவரது நூல்களைப் படித்துத் தம்முள் ஏற்கப் போதிய ஓய்வோ சாகக்கிரியோ இல்லை. ஸ்ரீ அரவிந்தர் தாமும் கையாண்டு, நம்மையும் பின் பற்றச் செய்துள்ள யோகாரீதியின் இலட்சியங்கள், உபாயங்கள் பற்றித் தப்பு அபிப்பிராயங்கள் அல்லது சந்தேகங்கள் அவர்கள் மனத்தில் குறுக்கிடலாம், ஏன் குறுக்கிடவே செய்கின்றன. ஆகவே நாம் இங்கு, போதனைகளின் அடிப்படைகளில் சிலவற்றை எடுத்துக் காட்டுவோம். அவை, ஆர்வத்துடன் உசாவும் சாதகனுக்கு ஏற்படும் பிரச்னைகளையும் சந்தேகங்களையும் தீர்க்கவும், நம்பிக்கையின் ஒருவித உறுதி அல்லது சாயலைக் கொணரவும் சிறிது உதவும். ஏனெனில் சில சந்தேகங்களைத் தீர்ப்பது கடினம். சூழ்நிலைச் சக்திகள் தங்கள் பிரபாவத்தால் அவைகளுக்கு அடிக்கொரு தடவை வலிவூட்டுகின்றன. வழக்கத்திலும் பழக்கத்திலும் நிலவும் கொள்கைகள் அவைகளுக்கு ஊன்றுகால் அளித்துப் போஷிக்கின்றன.

முக்கியமாக ஸ்ரீ அரவிந்தர், அவருக்கு முன் பாரத தேசத்தில் இருந்த பெரும் அத்யாத்ம குருமார்கள் போலவே, ஒரு யோகி. அதற்கடுத்ததுதான் யோக திருஷ்

டியால் அவர் கண்டு தெளிந்த முடிவான உண்மைகளைப்பற்றி உரைக்கும் தரிசனம். அவரது கோட்பாட்டின் தத்துவ சாஸ்திர அடிப்படை உறுதியாக உளது. ஏனெனில், ஆத்மீக வாழ்வின் அனுபவங்களுடனும், யோக அறிவால் சரிபார்த்த. சரிபார்க்கக்கூடிய உண்மைகளுடனும் ஒவ்வொரு திருப்பத்திலும் இணைக்கப்பட்டுள்ளது அது. ஊகத்துடன் தட்டுத் தடுமாறிக் கிடைத்ததல்ல அவரது தரிசனம்; அல்லது வாதப்ரதிவாதங்களுக்காக, மேக மண்டலங்களில் நின்று சொற்போர் நிகழ்த்துபவர் அவரல்லர். எனினும், அவரது ஜீவனளிக்கும் உரைகளடங்கிய பெரிய பெரிய புத்தகங்களில் வாதப்ரதிவாதங்களுக்குப் பஞ்சமில்லை. யோகப பயிற்சிகள் மூலம் அனுபவித்து உணர்வதற்கான உண்மைகளுக்குத் தத்துவ சாஸ்திர முறையில் விளக்கம் அளிக்கின்றார்களே. அவ்விளக்கம் வெறும் சாஸ்திர ரீதியாய் இருக்கலாம்; ஆயினும், உண்மையில், விவேகம் மானிட ஜீவனுக்கு மிகக் கிட்டின உயர் கருவியாய் இருக்கும்வரை. அதன் மதிப்பை நாம் குறைத்துக் கூற முடியாது.

இப்போது நாம் இந்த யோகத்தின் இலட்சியங்களுடன் நேரிடையாகத் தொடர்புற்ற அடிப்படைத் தத்துவங்கள் சிலவற்றைக் கூறுவோம். ஸத், சித், ஆனந்தமான பிரும்மம் இரண்டற்ற ஒன்று என்ற வேதாந்தக் கொள்கையுடன் ஸ்ரீ அரவிந்தர் ஆரம்பிக்கின்றார். ஆனால் அவரது அத்வைதம் எல்லா உலகுகளையும் எல்லாப் பிராணிகளையும், எல்லா சிருஷ்டி வடிவங்களையும், சர்வ சக்தனை சர்வசைதன்யனை பரம ஸத்துப் பொருளான பிரும்மத்தின் உற்பத்தி, வெளிப்பாடாகப் புரிந்துகொள்வது. உலகங்களுக்கு மேலும் அப்பாற்பட்டும் இருக்கும் தனிக் கேவலப் பொருள்; அதுவே இந்த எல்லாம் ஆனது, பலவாயிருக்கும் ஒன்று இவ்விதம் பிரும்மம் அனைத்தையும் தன்னுள் கொண்ட மட்டற்ற அநந்தம். சர்வ வல்லமையுள்ள தன் மட்டற்ற தன்மையிலிருந்து மட்டுப்பட்ட உலகுகளையும் பிராணிகளையும், எவ்வளவு எண்ணிக்கை வேண்டுமானாலும் வெளிக்கொணர்கின்றது. அது அவைகளின் மூலம், ஆதாரம், அவைகளின் சத்து, சாரம்; எனினும் எல்லாச் சம்பந்தங்களிலிருந்தும் எல்லா உபாதிகளிலிருந்தும் விடுபட்டு எல்லா வெளிப்பாட்டிற்கும் மேலே, எடுக்க எடுக்க வற்றாதபடி இருந்து வருகின்றது அநந்தம் என்பது திட்டமாயுள்ள ஏதோ ஒன்று; எல்லாக் குணங்களும் சிருஷ்டிகளும் தன்னுள் நிரம்பி இருந்தும் அவைகளை மீறி அப்பால் இருப்பது; ஒன்றுமில்லாத சூன்யமல்ல இந்தச் சூன்யத்திலிருந்தோ, அதற்கு மாறாகவோ சிருஷ்டி முளைத்து எழவில்லை. இவ்விதம் பிரும்மம் ஒரே தருணத்தில் அப்பாலிருக்கும் கேவலப் பொருள், எங்குமிருக்கும் விச்வ வியாபி, உள்ளுறையும் தனி ஒருவன், அவனே ஒரு சமயத்தில கலை (பாகம்)களுடன் சேர்ந்த ஸகலன், அவ்வாறற்ற நிஷ்கலன்.

சிருஷ்டி மேலிருந்து தொடர்ந்து கீழாக (ஊர்த்வ மூலம்) பூமியில் முடிவுறுகின்றது என்பது பண்டைய உண்மை. கீழ்நோக்கி வந்துள்ள வெளிப்பாட்டில் அநேக சிருஷ்டிகள், பல்வேறு தரப்பட்ட இருப்புகளின் வடிவமைப்புகள், உணர்வின் வெவ்வேறு நிலைகள், பூமிகைகள் என்று பெயர்கொண்டு அவைகளுக்குரிய செயலாற்றும் களங்

சணுடன் உள்ளன. அவ்வரிசையில் நமது மாநில பூமிகைதான் கடைசியிலுள்ளது. தெய்வத்தின் உயர்தர சக்திகளனைத்தையும், தெய்வத்திற்கும் தனக்கும் இடையே உள்ள பூமிகைகளின் ஆற்றல்களையும் — அதாவது ஆதி மூலமான சிருஷ்டிக்கும் நிலையிலிருந்து, அதிமனம் என்று நாம் வழங்கும் பூமிகையிலிருந்து, நமக்குரிய பூமிகைவரை. சிருஷ்டி கீழ்நோக்கி வரும்போது ஊடுருவிய உணர்வின் படிப்படியான ஆற்றல், தத்துவம் அனைத்தையும், — இம் மாநில ஜீவன் தன்னுள் அடங்கப் பெற்றுள்ளது. மாநிலத்திற்கு ஒரு திட்டமான தனிவடிவம் ஏற்படத் தொடங்கிய நாளிலிருந்து, அதன் பிரச்னையும் பிரயாசையும் இதுவே. தன்னுள் பொதிந்துள்ள உயர்தர ஆற்றல்களை வெளிக்கொணர்வது. சிருஷ்டிக்கும் தெய்வத் தலைவனின்பால் நெருங்கிய ஏதோ ஒன்றாக மேன்மேலும் வளர்வுறுவது இவ்வாறு வெளிக்கொணர்வதற்காக மாநில உணர்வில் உதிக்கும் தூண்டலை, மானிட மொழியில், தெய்வத்தின் உயர்தர சக்திகளைத் தன்னுள் இறங்குமாறு அழைக்கும் ஒருவித ஆர்வம் எனலாம். இந்த அழைப்பிற்கிணங்க, உயர்தர தத்துவங்கள் அதிகரித்த வன்மையும் உணர்வும் பெற்ற தங்களது சக்திகளுடன் கூடக் கீழ்நோக்கிச் சிறிது சிறிதாகப் புகுகின்றன. இதனால் மாநிலம் தனது வியக்தமாய்ப் பிரிக்கப்பட்ட வாழ்வின் தனித்தொகுதிகள் மூலம் தனது சத்துவத்தினுள் கட்டுண்டு இருப்பவைகளை விடுவித்து, அவைகளை வெளிப்படுத்தக்கூடும். ஆக, பிரும்மாண்ட இருப்பின் உயர்தரத் தத்துவங்கள் மிகவும் கீழ்நிலை மட்டத்திலிருக்கும் பௌதிக உலகிற்கு இறங்குவதற்கு வகை செய்ய, படைப்பின் போக்கில் இரு இயக்கங்கள் உள்ளன — மாநில உணர்வின் கீழிருந்து வெளிக்கொணர்வதற்கான ஓர் தூண்டல்; மேலிருந்து அதற்கு மறுமொழியாக உள்ளே ஊடுருவும் உயர்தர சித்சக்தி.

பூமியின் வெளிக் கொணரும் முறையில் தெள்ளெனத் தோன்றும் முதல்படி ஜடத்தில் உயிரின் வளர்ச்சி. இது பூமிக்கு அடுத்து மேலேயுள்ள பிராண உலகிலிருந்து ஜட உலகினுள் பிராணன் இறங்கியதன் விளைவு. அடுத்த பருவம் உயிருள்ள ஜடத்தில் மனம் இறங்குவது. இதனால் உயிருள்ள ஜடப் பொருளுக்கு மனத்தை வெளிக் கொணர்ந்து, அதை மாநில வாழ்விலும், மாநில உணர்விலும் ஓர் ஒழுங்குக்கட்டு வாய்ந்த தொகுதியின் அங்கமாக, கருவியாக நிலைநிறுத்துவது சாத்தியமாகின்றது. தெய்விக சிந்தனையாளனும் மனுவின் சந்ததியாகிற மானவனிடம் பூமியானவள் வெளிப்பட்டு நிலைத்த மனத்தின் தத்துவத்தை அதன் எல்லா ஆற்றல்களுடன் மிகவும் உயர்ந்த ஓர் அளவுக்கு வளர்வுறச் செய்துள்ளாள் — தன் எல்லையைத் தாண்டித் தேடி, அதற்கு இன்னும் மேலுள்ளதைச் சந்தித்து அதைக் கீழே கொணர்வதற்காக. பூமியின் இயல்பில் காணும் வெளிக்கொணரும் போக்கு அதன் முழுப்பிரயாணத்தையும் முடிக்கவில்லை என்பது வெள்ளிடை; மனது அதன் சமாப்தி அல்ல, அதன் பிரயாண முடிவின் இலக்கு அல்ல. தன் அழைப்பின் மூலம் அதிமனதின் தெய்விக சிருஷ்டித் தத்துவத்தைச் சந்தித்து, அதை மாநிலத்தில் வளர்வுற்ற மானிடத் தொகுதிகள் மூலம் நிலைநாட்டும்வரை, இந்த வெளிக் கொணரும் தூண்டல் உவகையுடன் ஓய்வு பெறாது. மேலும்

சிருஷ்டித் தத்துவம் ஜட உலகம் வரை கீழே எட்டி, அதன் தேவைகளுக்கு விடையளிக்கும் வகையில் ஊடுருவி ஒரு மறுமொழியின் உருவத்தை எடுத்துக் கொண்டது—அதன் தத்துவத்தினுள் கண்டுண்டிருப்பவைகளை, அதனுள் ஊடுருவிய உயர்தரத் தத்துவங்களை, உட்புதைந்த ஆற்றல்களை விடுவிப்பதற்காக இந்த வெளிப்பாட்டின் முன்னேற்றப் பாதையில் விதிக்கப்பட்ட அடுத்த படியும் மிக சோதனையான, தவிர்க்க முடியாத படியுமான அதிமனத் தத்துவத்தின் உயர்தர ஆற்றல்கள், உணர்வு இவற்றை ஒழுங்காய் அமைக்க, இவை சித்தமாய்க் காத்திருக்கின்றன.

மாநில உணர்வினுள் அதிமனம் இறங்கும்போது, உன்னதமாய் வெளிப்பாடு அடைந்த மனிதத் தொகுதியில், பூமியில் மிகவும் வளர்வுற்ற மனோமய புருஷனில், அது ஒழுங்காய் உருவாகின்றது என்று ஸ்ரீ அரவிந்தர் தெள்ளெனக் கொள்ளுகின்றார். இதைக் காட்ட மேற்சொன்ன சுருக்க வரலாறு சாலும். அவ்வாறு மாநிலத்தில் தோன்றும் அதிமன ஜீவன் உயிருள்ள ஜடப்பொருளில் உடல் கொண்ட மனத்தின் கீழ்தரத்தத்துவத்தைப் புறக்கணிப்பதில்லை. எதுபோல் எனின், வெளிக்கொணர்தலின் பழைய பருவங்களில், புதிதாக வெளிப்பாடுற்ற மனது தனது தோற்றத்திற்கு இடமான உயிரையும் உடலையும் எறிந்துவிடவில்லை; ஆனால் அவைகளை உபயோகிக்க முயன்றது; எவ்வளவு குறைபாடுகளுடன் செய்திருந்தாலும் சரி; அவைகளின் செயல்களையும் போக்குகளையும் தனக்குரிய விதிகளுக்கு மாற்ற முயன்றது. அவ்வாறே அதிமன அச்சின் அத்யாத்ம ஜீவன், மனம், உயிர், உடல் இவைகளை உபயோகப்படுத்தும்; மனது செய்தது போல் குறைவுற்ற வழியிலோ அறியாமையிலோ அல்லாமல் ஒரு கைதேர்ந்த வழியில், நமக்குரிய பூமியை அனைத்திலும் கீழ்ப்படியாகக் கொண்ட இந்த பிரும்மாண்ட ஆவிர்பாவத்திற்குத் தலைமை தாங்குகின்றானே, அந்தத் தெய்வ சிருஷ்டிகர்த்தனின் வழி இவ்வழி.

ஆகவே, மனிதனில் அதிமனதின் வெளிப்பாடு திருத்தமாகப் பேசுமிடத்து, ஆதிமூலமான படைக்கும் ஆற்றல் பெற்ற அதிமனதினுடைய தெய்விகத் தத்துவத்தின் இறக்கமே. அதன் விளைவு இங்கு ஒழுங்குற உருவான ஓர் அதிமன உணர்வு. அது தனிமனிதனைப் பற்றியும் அவனைச் சுற்றியுள்ள இருப்பைப் பற்றியும் ஓர் அத்யாத்மமான, அதியனத் தொடர்புற்ற, தெய்விக நோக்குக் கொள்கின்றது. அதற்கே உரியதான உன்னத வழியில், அதாவது உண்மை-ஆற்றல், உண்மையுணர்வு வழியில், கீழ்தரக் கருவிகளான மனம், உயிர், உடல் இவைகளின் செயல்களை ஒழுங்குபடுத்தி ஒன்றுக்கொன்று இசையச் செய்கின்றது அவைகளின் சத்து, சாரத்தையே உருமாற்றுகின்றது. மாநிலத்தின் மேல், மானிட வாழ்வில் தெய்வ நோக்கம் நிறைவேறுவதற்கு வேண்டிய இன்றியமையாத பொருத்தத்திற்காக அவைகளை மாற்றி அமைத்து ஒழுங்குபடுத்துகின்றது.

இதுதான் ஸ்ரீ அரவிந்தரது யோகத்தின் இலட்சியம். இந்த இலட்சியம் பூமியில் வெளிப்பாடுறும் எப்பிராணிக்கும் கிட்டாமல் இருக்காது. தெய்வ வியக்தியின் மூலம் மானிட அகந்தையின் இடப்பெயர்வு, அதற்குத் தக்கபடி உணர்வின் பரிவர்த்தனை,

அவ்வுணர்வின் உன்னத சக்தியால், அதிமனத் தொடர்பு கொண்டு சிருஷ்டிக்கும் உலகின் தெய்விக தாதுக்களை, மானிடனிடம், அதாவது அவைகளது உருக்குலைந்து தலை கீழாய்ப் புரண்ட மாநிலத்திய பிரதிகளான மானிட அம்சங்களிலும் கருவிகளிலும் நிலை நிறுத்தல்,— இவையெல்லாம் இந்த லட்சியத்தினுள் அடக்கம். ஆகவே இது மனிதனின் தெய்விகப் பூரணத்தை அவனது இருப்பின் எல்லாப் பகுதிகளிலும் குறிக்கின்றது. இதுவே வெளிக்கொணரும் பிரயாசையின் அடுத்த உடனடியான பலன். அப்போது, தற்போதைய சிருஷ்டி, அதன் குறைபாடுகளுடன், விபரீதமான வடிவமைப்புகளுடன் கூட, அது ஆகவேண்டிய ஒரு பூரண தெய்விக சிருஷ்டியாக மாற்றப்படுகின்றது. ஏன் அவ்வாறு இன்னும் மாறவில்லை என்றால் கால நியதியின் நிபந்தனைகளுக்கு உட்பட்டே வெளிக்கொணரும் இயக்கம் ஆற்றப்படுகின்றது.

வெளிப்பாட்டின் முன்னேற்றப் பாதையில் ஒவ்வொரு தீர்மானமான அடியும் ஓர் ஈரியக்கத்தின் மூலம் சாதிக்கப்படுகின்றன என்று கூறியுள்ளோம். எதன் இரு இயக்கங்கள்? யாரால் இயக்கப்படுகின்றன? இந்த வெளிக்கொணரும் ஆவிர்ப்பாவத்தில் தலைமை தாங்கும் தெய்வமே, இந்தச் சிருஷ்டியில் ஒரு சோதனையான அடி எடுத்து வைக்கப்படும் போதெல்லாம், தனது திருவருள் மூலம் குறுக்கிட்டு, கீழ்த்தரச் சிருஷ்டிக்கு உதவி புரிகின்றது. வெளிப்பாடென்னும் ஏணியில் ஜடமாய், இருளாய் சிறிது மங்கலாய் இருக்கும் படிகளிலிருந்து மேலேறி, அது, உயர் தர இருப்பு நிலைகளின் ஒளிகளை நோக்கி மேன்மேலும் முன்னேறும் வண்ணம் செய்கின்றது. கீழிருந்து எழும் அழைப்புக்குச் செவி சாய்ப்பது தெய்வத்தின் திருவருள்; வெளிக்கொணரும் தூண்டல் ஆரோகண இயக்கத்தை நடத்திச் செல்லும் ஆர்வம். குறுக்கிடுவது கீழ்நோக்கிப் பாயும் தெய்வ அருளின் மறுமொழி; இதுவே அவரோகண இயக்கம். ஆக தெய்வத்தின் மூலமான சிருஷ்டி சக்தி யோகசக்தியின் இரு இயக்கங்களையும் ஏற்கின்றது. உண்மையில் இதன் முதல் சாதகனும் கடைசி சாதகனும் ஈச்வரனே.

நிச்சயமாய், மாநிலம் அதிமனதைத் தனது உணர்வற்ற ஜடமான உடலினுள் ஏற்பதில்லை; காய்கனி வர்க்கத்திலிருக்கும் தனது உயிரினுள்ளும் அல்ல; கீழ்த்தர விலங்கில் அல்லது மனிதன் எனபடும் மேல்தர விலங்கிலிருக்கும் தனது பக்குவமடையாத மனிதனுள்ளும் அல்ல. அவள் தனது மிகவும் வளர்வுற்ற

பாகத்தில், மிகவும் உன்னதமாய் வெளிப்பாடுற்ற தாதுவில், அதாவது மானிடவகையில் ஆர்வமுறும் ஆத்துமாவில் அதை ஏற்கின்றாள். இதிலும்கூட வெளிப்பாடுறும் மாநில இயல்பினுள் இறங்கும் அதிமனதின் உயர்தர அத்யாத்ம தத்துவத்தை ஏற்றுத் தன்னுள் கொள்ள, மானிடவகையின் எல்லாத் தொகுதிகளுமே முதலில் சித்தமாயும் தகுதியாயும் இருப்பதில்லை. எந்த ஒரு மனிதன் இதற்காகவே பிறந்தும் மிகவும் சித்தமாயிருக்கின்றானோ, எவனிடம் மற்ற எல்லாவற்றையும் தவிர்த்துத் தெய்வ அவரோகணத்திற்காகவே, மண்ணிலிருந்து விண்ணிற்கு ஆர்வத் தீ கொழுந்துவிட்டு எரிகின்றதோ, கீழ் இறங்கும் அதிமனது, பூமியில் மானிட வாழ்வில் ஆட்சிபுரியும் தெய்வத் தத்துவமாக நிலை பெறவேண்டும் என்பதற்காக எவன் தனது இருப்பின் எல்லா அம்சங்களையும் அதன் இச்சைக்கும் சக்திக்கும் முன்னால் ஒளிவு மறைவின்றி வைத்துப் பூர்ணமான சமர்ப்பணத்தைச் செய்கின்றானோ, அவனே தேர்ந்து எடுக்கப்படுகின்றான். அப்படிப்பட்ட ஒருவனிடமிருந்து, சூரியனிடமிருந்து வெளிச்சம்போல் நிலைநிறுத்திய அதிமனதின் பிரபாவம் ஒளி, ஆற்றல் பாய்ந்து ஓடுகின்றது. எவர் தங்களது இருப்பின் சிகரங்களில் சித்தமாயிருக்கின்றனரோ அல்லது அவைகளை ஏற்கத் தகுதியாய்ப் பிறந்திருக்கின்றனரோ அவர்பால் பரவிச் செல்கின்றது. பள்ளத்தாக்குகளை இரவின் இருள் கவ்விக் கொண்டிருக்கும்போதே, மலைச் சிகரங்களில் வைகறை விடிகின்றது; மறையும் சூரியனின் கடைசிக் கதிர்களைப் பெறுபவைகளும் அவைகளே என்று நன்றே கூறியுள்ளனர்.

ஸ்ரீ அரவிந்தர் தாம் மேற்கொண்டு நடத்தும் இப்பெரும் முயற்சியில் சித்தியின் தரத்தையே முதலில் கருதவேண்டும்; அதன் விரிவு, அளவு, சகஜமாய் நாளடைவில் பின் தொடரும் என்று இதுகாறும் கூறியுள்ளவைகளிலிருந்து தெளிவாகும்.

இந்த யோகத்தின் இலட்சியங்களையும் உபாயங்களையும் இப்போது நாம் கூறி விட்டோம். இந்த யோகத்தில் கையாளும் கொள்கைப்படி நோக்கினால், ஆரம்பத்தில் கூறப்பட்ட ஐயங்கள் எல்லாம் தீர்ந்து, மனம் அமைதியுற்றதா இல்லையா என்று நிர்ணயித்தலை நாம் கவனமாகப் படித்துவரும் வாசகருக்கே விடுதல் நலம். மனித ஜாதியின் பழஞ் சரித்திரத்திலேயே இதுவரை இத்தகைய முயற்சி எப்போதாகிலும் செய்யப்பட்டிருக்கின்றதா என்றே நாம் கேட்கலாம். எந்த யுகத்திலாவது, மானிட சமூகத்தில் எத்தொகுதியினராயினும் சரி, இத்தகைய மனோபாவனைக்காகவேனும் தம்மிடம் இடம் அளித்தனரா என்பதே சந்தேகம். தாந்திரீக சித்தர்களால், மானிட வாழ்வைப் பற்றிய கோவையான நோக்கத்துடன், மானிட பூர்ணத்திற்காக ஒரு முயற்சி செய்யப்பட்டது என்பது வாஸ்தவம். ஆனால் அது தனிப்பட்ட மனிதனின் சொந்த நிறைவுக்காக ஆற்றப்பட்டது— பௌதிக உடலின் பூரணமான கட்டுப்பாடுங்கூட அம்முடிவுக்கு அனுசரணையாகவே குறிக்கப்பட்டது. ஒரு காரணத்திற்காகவேனும் நாம் இந்த யோகத்தைப் புதிது என்கிறோம். ஏனைய யோகங்களின் பயிற்சிகளிலிருந்தும் லட்சியங்களிலிருந்தும் இதை வேறாகப் பகுத்து அறியவேண்டும். அவைகளில் சில, தங்களது விவரங்களிலும் முறைகளிலும்

எப்போதும் ஒன்றாய் இல்லாவிடினும், தங்களது சாராம்சத்தில், பயனில், அதிமனச்சாதனையின் கட்டுக்கோப்பில் புகுந்திருக்கின்றன. ஏனெனில், ''பரம சாந்தி முழுதும் அத்தியாவசியம் அது இல்லாமல் நிலையானது ஒன்றும் சித்திக்காது'' என்று இங்கு உபதேசிக்கப்பட்டால் ஒரு சாது மனது எளிதில் முன்னால் பாய்ந்து இவ்விதம் கூறலாம்: ''இது புதிதல்லவே. இது வேதாந்தத்தில் இருக்கின்றது. இதுதான் புத்தர் பிரான் உபதேசித்த நிர்வாணம். பார்க்கப் போனால் இது முடிவில் ஸ்ரீ சங்கரர் போதித்த கேவலப் பொருளின் சாந்தியே.'' சாதனையின் ஓர் அடிப்படைத் தத்துவம் சரணாகதி என்று இங்கு புகட்டப்படின், ஒருவர் உடனே குதித்தெழுந்து கூறுகின்றார்: ''இது ஒன்றும் புதிதல்ல. திருக் கண்ணபிரான் இதைப் போதித்துள்ளார். மகான் ராமானுஜர் இதைப் பற்றி எவ்வளவோ எழுதியிருக்கின்றார்.

இவ்வாறே இங்குச் சாதனையில் புகும் ஒவ்வொரு அம்சத்தையும் வாதத்திற்கு எடுத்துக்கொண்டு, அவரவர் திருப்திக்காகவேனும் அது புதிதல்ல என்று நிரூபிக்கலாம். ஆனால் இந்த யோகப் பயிற்சியின் முக்கியத்துவமும் மகத்துவமும் இதன் புதுமையைச் சார்ந்ததல்ல என்பதை நினைவில் கொள்ளவேண்டும். ஆயினுமென்ன? முன்பே இருக்கும் பொருள்களால் ஓர் புது நிர்மாணம் அமையக்கூடாதா? ஒவ்வொன்றும் அதனது வடிவமைப்பிலும் பயனாகும் தன்மையிலும் புதிதல்லவென்றால் அப்போது உலகில் எதுதான் புதிது?

இது அதிமனத்திய யோகம்—அதிமனத்தியது. ஏனெனில் மனதிற்குமேல் அப்பாலிருக்கும் தெய்வம் பூமிக்காக ஆற்றும் அதிமனதின் யோகம். சில சமயம் இது பூரணயோகம் என அழைக்கப்படுகின்றது. ஏனெனில் மானிட ஜீவன் தனது எல்லாப் பகுதிகளிலும் அரை குறையாக இல்லாமல் ஒரு சம்பூர்ணமான அநுபவம் பெறுவது, மானிட வாழ்வில் அதிமனத் தொடர்புற்றவை நிலைப்பதால் ஏற்படும் சகஜமான விளைவு. இது தனது கருமங்களிலும் பயன்களிலும் ஒரு கோவையான குணமுடையது. மானிட ஒன்றிப்புக்காக முனைகின்றது. ஆகலால் இந்த அர்த்தத்தில் ஒரு கோவையான ஒன்றிப்புயோகம் என அழைக்கப்படலாம். கடைசியாக, நமக்கு உடனடியாக இது ஸ்ரீ அரவிந்தரின் யோகம். ஏனெனில் அன்னாரே இவ்வுண்மையைக் கண்ட ரிஷி, இந்தச் சாதனையின் மார்க்கதரிசி. இம்மாநில வாழ்வில் ஓர் ஆத்மீகமான தெய்விக ஆவிர்ப்பாவம் ஏற்பட்டு அதன்படி உருமாற்றம் அடைவதற்காக, மானிட ஜீவனின் கிரம வெளிப்பாட்டில் ஏற்பட்டிருக்கும் அவசியத்தை உணர்த்தி மூடியுள்ள திரையை விலக்கியவர். இங்கு மனிதவாழ்வு தெய்விகமாய் ஆகக் கூடுமான துறைகளைத் திறந்துகாட்டியவர்.

''பூதாகாரமான சிறகுகளுடன் நலனுக்த எழும்புகின்றான் அவன். இதுவே அவனது பெரும் அமைதியின்மையின் காரணம். ஏனெனில் மட்டற்ற அநந்தங்களிலிருந்து வந்தான் அவன்—சாகும் பொருள்களைக் கொண்டு சாகாத முறையில் நிர்மாணிக்க, பெருகும் ஜீவனால் உடலை நிரப்ப, உழலும் மண்ணிலப்மீது விண்ணின் உரிமையைப் பரப்ப, அமர இச்சையின் பிடிப்பும் ஆகரவும் பெற்று சாவிலிருந்து இன்னும் தெய்விகப்பிறப்பிற்குமேலேற.''

ஸ்ரீ —அரவிந்தர்


அனைவருக்கும்
ஆனந்தம் அளிப்பது
காளி
மார்க்
காளி மார்க்
Kali mark
வாத்திய கோஷ்டித் தலைவர் விரும்புவதும் காளி மார்க் பானம்தான். ஆயிரக் கணக்கானவர்கள் காளிமார்க்கின் குளிர்ந்த, புதுமை மாறாத ருசியை அனுபவிக்கின்றனர். நீங்களும் உங்கள் தாகம் தணிய காளி மார்க் பானங்கள் அருந்துங்கள்.
50 ஆண்டுகளாகப் புகழ் பெற்றவை. எங்கும் கிடைக்கும்.

மந்திரங்கள்

'மந்திரத்தினால் மாங்காய் விழுமா?' என்று கேட்கிறார்கள்.

ஒரு மாங்காயைக்கூட வீழ்த்த முடியாது என்றால், அந்த மந்திரத்தினால் பலன்தான் என்ன?

அத்தகைய பலன் இல்லாத மந்திரங்களை நாம எதற்காக ஜெபம் செய்வது? தியானம் செய்வது?

புகைவர்களைத் தண்டிப்பது, நண்பர்களை வாழ்விப்பது இந்த இரண்டு வகையான ஆற்றல்களையும் தவத்தினால் அடைந்துவிடலாம் என்கிறார் திருவள்ளுவர்.

அதுமட்டுமல்ல; எண்ணியதை எண்ணியபடி முடிக்கும் ஆற்றலும் தவத்தினால் ஏற்படுகிறது என்கிறார் அவர்.

தவத்தினால் என்ன என்ன காரியங்களைச் சாதிக்க முடியுமோ, அவை அனைத்தையும் மந்திரங்களாலும் சாதிக்க முடியும். காரணம், தவம் வேறு-மந்திரசாதனை வேறு அல்ல; இரண்டும ஒன்றே!

உத்தமமான மந்திரங்களில் சித்திபெற்ற பெரியோர்களால் இல்லாத காரியம் உலகில் எதுவுமே கிடையாது. அத்தகைய சித்தியை நாம் எல்லோருமே பெறலாம். ஆனால் அதற்கு வேண்டிய ஊக்கமும விடாமுயற்சியும் நம் எல்லோரிடமும் இருப்பதில்லை.

ஊக்கமும் விடாமுயற்சியும் இருந்தபோதிலும் கூட, மந்திரத்தைச் சித்தி செய்வதற்கு உரிய சாதனை முறைகள் நமக்குத் தெரிந்திருப்பதில்லை. அத்துறையில் நமக்கு வழிகாட்டக் கூடிய குருவும் நமக்கு எளிதில் கிடைப்பதில்லை;

மந்திர சித்தி என்றால் என்ன என்பது, பெரும்பாலான உபாசகர்களுக்கே தெளிவாகத் தெரிவதில்லை. அப்புறம் அவர்கள் சித்தி பெறுவது எப்படி?

முதலாவதாக, சரியான வித்யா பரம்பரையில் வந்த ஒரு குருவினிடமிருந்து, நாம மந்திரோபதேசத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும். வெறுமே புத்தகங்களைப் படித்துக் கற்றுக்கொண்ட மந்திரங்கள், ஒரு நாளும் சித்தியைத் தரமாட்டா.

நமக்கு மந்திரோபதேசம் செய்கிற குருவும் ஒரு மந்திரசித்தி பெற்றவராய் இருக்கவேண்டும் என்ற அவசியம் இல்லை. அவர் ஒழுங்கான குருபரம்பரையைச் சேர்ந்தவராயிருந்தால், அது ஒன்று மட்டுமே போதுமானது. அவருடைய மற்ற தகுதிகளையோ தகுதியின்மைகளையோ பற்றி, சிஷ்யன் கவலைப்படத் தேவையில்லை.

சிஷ்யனைக் காட்டிலும் குரு படிப்பில் குறைந்தவராய் இருக்கலாம். பல குறைபாடுகளை உடையவராய் இருக்கலாம். ஆனால் அந்தக் குறைபாடுகளையெல்லாம் அவன் தன மனத்தாலும் நினைக்கக் கூடாது. அவனைப் பொறுத்தவரையில், அவர்தான் நடமாடும் கடவுள். அவர் உபதேசம் செய்த மந்திரத்தின் அதிதேவதை வேறு, அவர் வேறு என்று அவன் எண்ணக் கூடாது. அவரை அவன் அந்த தேவதையாகவே எண்ணி வழிபட வேண்டும் ஒரு மந்திரத்தில் ஒருவன் சித்தி பெறுவதற்கு. இதுதான் முதலாவது நிபந்தனை

இரண்டாவதாக, அந்த மந்திரத்தின் அதிதேவதை தனக்கு வெளியே வேறு எங்கேயோ இருப்பதாக அவன் கருதக் கூடாது. தனக்கு உள்ளேயே

தன் உயிருக்கும் உயிராய் அது உறைந்திருப்பதாக அவன் கருத வேண்டும். அதாவது, தன் உடலுக்குள்ளே எப்படி ஓர் உயிர் இருக்கிறதோ, அதேபோல் தன் உயிருக்குள்ளே அந்தத் தேவதை இருப்பதாக அவன் உணரவேண்டும். தன் உடல், உள்ளம், உயிர் எல்லாமே அந்தத் தேவதையின் உடைமைகள் என்பதை அவன் தெரிந்துகொள்ள வேண்டும். இது இரண்டாவது நிபந்தனை.

மூன்றாவதாக, உலகிலுள்ள எல்லா ஜீவராசிகளிடத்திலும் அந்தராத்மாவாக இருந்து, அவற்றின் மனமொழி மெய்களை இயக்கிக்கொண்டிருப்பதும் அந்த தேவதைதான் என்று அவன் உறுதியாக நம்பவேண்டும்.

நான்காவதாக, அந்த மந்திரம் தனக்குக் கட்டாயம் சித்தியாகப் போகிறது என்பதில் அவனுக்குத் தளராத நம்பிக்கை இருக்க வேண்டும்.

இந்த நான்கு நிபந்தனைகளையும் நிறைவேற்றியவாறே, அவன் அந்த மந்திரத்தை உபாசனை செய்ய வேண்டும்.

உபாசனையில் மூன்று அங்கங்கள் உண்டு: முதலாவது, பூஜை; இரண்டாவது, ஜெபம்; மூன்றாவது, ஸ்தோத்திரம்.

இவற்றுள் பூஜை எப்படிச் செய்ய வேண்டும் என்பதை அவன் குருவினிடமிருந்து தெரிந்து கொண்டு, அந்த முறைப்படி செய்ய வேண்டும்.

பூஜைக்குப் பிறகு ஜெபம் மந்திரத்தை முதலில் உச்சரிப்புப் பிழையில்லாமல் வாய்விட்டு ஜெபிக்க வேண்டும். பிறகு மனத்திறகுள்ளேயே ஜெபிக்கக் கற்றுக் கொள்ள வேண்டும்.

அவனன்றி ஓரணுவும் அசையாது!

கலைச்செல்வி மணிமேகலை

அருணன் இந்திரன் திசை அணுகினன் இருள்போய்
அகன்றது உதயம நின் மலர்த்திரு முகத்தின்
கருணையின் சூரியன் எழஎழ நயனக்
கடிமலர் மலர மற்றண்ணலங் கண்ணும்
திரள்நிறை யறுபதம் முரல்வன இவையோர்
திருப்பெருந் துறையுறை சிவபெருமானே
அருள்நிதி தரவரும் ஆனந்த மலையே
அலைகடலே பள்ளி எழுந்தருளாயே!

மாணிக்கவாசகர் பாடியருளிய திருவாசகத்தில் உள்ள திருப்பள்ளியெழுச்சிப் பாடல்கள் பத்தில் மேற்கண்ட பாடல் ஒன்று.

சின்னஞ் சிறு பிராய முதலே திருவாசகமும் திருவருட்பாவும் எங்கள் தகப்பனாரால் எங்களுக்குச் சொல்லித்தரப் பட்டன. எளிமையான. எல்லாருக்கும் புரியக்கூடிய இனிய தமிழ்ச் சொற்கள் மாணிக்கவாசகராலும் இராமலிங்க சுவாமிகளாலும் திருவாசகத்திலும் திருவருட்பாவிலும் கையாளப் பெற்றிருக்கின்றன.

நம்முடைய வளர்ச்சிக்கு குறிப்பாக—வளரும் குழந்தைகளுக்கு ஆங்கிலம் அத்தியாவசியமானது தான். நாம பழகுகின்ற தமிழ்க் குடும்பங்களில் சில குழந்தைகள் தமது தாயரை மம்மி என்றும் தந்தையரை டாடி என்றும் சொல்லுகிறார்கள். தமிழில் இல்லாத ஒரு சிறப்பு மற்ற ஒரு மொழியில் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. தமிழுக்கு அமுதென்று பேர். வளரும் பிள்ளைகளுக்குப் பல மொழிகள் தெரிந்திருக்க வேண்டியது அவசியம். பண்பாடு தெரிந்திருக்க வேண்டியதும் அவசியம்தான் என்பதை மறக்கலாகாது. அண்மையில் நான் ஒரு நாடகம் பார்க்க மியூசிக் அகாடமி சென்றிருந்தேன். என் அருகில் இரு பெண்கள் உட்கார்ந்திருந்தனர். அவர்கள் தமிழ்ப்பெண்கள் என்பதில் எள்ளத்தனை சந்தேகமில்லை. அவர்களது பேச்சும் நடை உடை பாவனையும் அப்போதுதான் லண்டனிலிருநது நேராக மியூஸிக் அகடமிக்கு வந்தவர்களைப் போல் இருந்தது எனக்குச் சிரிப்பை உண்டாக்கியது.

மூடி மறைப்பது அழகு என்றார் சான்றோர். அதற்கேற்ப நமது பெண்கள் நடந்து கொள்ள வேண்டும் என்பது எனது வேண்டுகோள்.

சமீபத்தில் நான் எழுதிய கட்டுரையில் ஆண் பிள்ளைகள் சிலர் பெண்கள் அணிய வேண்டிய துணியை ஸ்லாக் என்றும் டைட் பாண்ட் என்றும் போட்டுக் கொள்கிறார்கள் என்று எழுதியிருந்ததைப் படித்த ஒரு மாணவன் சக மாணவனாகிய எங்கள் மகனிடம் உனது அம்மா என்

னைப் பார்த்துத்தான் இப்படி எழுதினார்களோ என்று கேட்டான். நான் அவனைப் பார்த்ததில்லை. பொதுவாக எழுதினேன் என்று ஆறுதலாகக் கூறினேன். அந்தப் பையன் இப்போது கண்ணியமாக உடையணிந்து கொள்கிறான். ஒரு வளரும் பையனைத் திருத்தியதில் எனக்கு மட்டற்ற மகிழ்ச்சி ஏற்பட்டது.

எங்கள் குழந்தைகளுக்குத் தினசரி தியானம் என்ற புத்தகம் வாங்கிக் கொடுத்திருக்கிறோம். அவர்கள் பள்ளிப் படிப்புக்கே திணறுபவர்கள் தினசரிதியானம் எங்கே பண்ணுகிறார்கள். சில நாட்களில் தியானம் பண்ணவில்லையா என்று பிள்ளைகளைக் கேட்டு நான் அர்ச்சனை செய்வதுண்டு. ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தரால் வெளியிடப்பட்டுள்ள இந்நூலில் ஒருநாள் தியானம் இது

அருள் தாகம்

''அற்பப்பொருளுக்காகதாகம் கொண்டுள்ள என் மனதில் அருள்தாகம் கொள்ளும்படி அண்ணலே நீ அருள் புரிவாயாக.

இன்று இருந்து நாளைக்கு அழிந்துபோம் பொருளுக்காக மனிதன் படும்பாடு எவ்வளவு பெரியது! ஊர் ஊராக அலைந்து திரிதல், ஓயாது உழைத்தல் ஆகிய இத்தனைவித இயக்கமும் பொருளல்லாப் பொருளை நாடியுண்டாகிற தாகத்தாலேயாம். என்றைக்கு அது அருள் தாகமாக மாறுகிறதோ அன்றைக்குப் புதிய வாழ்வு துவங்குகிறது. தாகம் எல்லார்க்குமுண்டு. தாகமில்லாது முன்னேற்றமில்லை, பொருள் தாகம் மனிதனைப் புண்படுத்துகிறது. அருள் தாகம் ஆறுதல் அளிக்கிறது.''

''கர்மமானது கோடிமுன்னே
செய்தாலும் நின்
கருணைப் பிரவாக
அருளைத் தாகமாய்
நாடினரை வாதிக்க
வல்லதோ''

—தாயுமானவர்

மற்றொரு நாள் தியானத்தில் இப்படிக் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

''நான் தேடுபவற்றுள் தெய்வமே நீ ஒருவனே பழுதற்ற பொருள். தெய்வத்துக்கு நாம் எதைக் கொடுக்கின்றோமோ அதை அவன் பன்மடங்கு அதிகப்படுத்தி நமக்கே கொடுத்து விடுகிறான். அவனுக்கு நாம் படைப்பவைகளில் மிக மேலானது. அவனைக் குறித்து நாம் பண்ணும் தவம். தவம் பண்ணப் பண்ண நம் தவத்தை அவன் இன்னும் அதிகப்படுத்துகிறான். தவமே வடிவெடுத் திருப்பவன் தெய்வத்துக்கு ஒப்பாகிறான். சிறந்த தவசியைக் காண்பதும் தெய்வத்தைக் காண்பதும் ஒன்றே.''

எளிமையும் ஏற்றமும் கொண்ட இந்த இரு தியானங்களைப் படிக்கும்போது நம் மனம் பண்படுகிறது. தவத்தின் மூலம் அருளைப் பெறவேண்டும் என்றும் தெரிகிறது. இதைத்தான் மாணிக்கவாசகர் திருவாசகத்தில் ''அவனருளாலே அவன் தாள் வணங்கி'' என்கிறார். அவன் எல்லாம் வல்ல பரம்பொருள். அவனை வணங்கவும் அவன் அருள் வேண்டும். அவனன்றி ஓரணுவும் அசையாது என்பது இதிலிருந்து புலனாகின்றது.

''வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி
ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்க்
கோனாகி யான் எனது என்று அவரவரைக் கூத்தாட்டு
வானாகி நின்றாயை என்சொல்லி வாழ்த்துவனே!''

—திருவாசகம்



கேட்டதெல்லாம் தரும் கல்பதரு

பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர்

தேசாந்தரமாய்த் திரிந்து கொண்டு சென்ற ஒருவன் ஒரு நாள் ஒரு பெரிய மைதானத்தை அடைந்தான். அன்று அவன் நெடுந்தூரம் வெயிலில் அலைய வேண்டியதாயிற்று. மேலும் உடம்பெல்லாம் வியர்வை ஆறாய் ஓ அதிகம் களைப்படைந்தான். தூரத்தில் மரம் ஒன்று நிற்பதைக கண்டு அதன் நிழலை அடைந்து சிறிது சிரயப் பரிகாரம் செய்வதற்காக உட்கார்ந்தான். 'ஆகா! இப்போது நல்ல மிருதுவான படுககை இருந்தால் எவ்வளவு சுகமாய் நான் தூங்குவேனே!' என்று எண்ணினான். இந்த எண்ணம் உதித்து மறைவதற்குள்ளாக ஒரு நல்லபடுக்கை பக்கத்தில் இருக்கக் கண்டான். அது எப்படி அங்கு வந்தது என்பதை அறியாதவனாய்த் திகைத்தான். தான் கல்பதருவின் அடியில் இருக்கிறான் என்பதை அவன் எப்படி அறிவான்? அவன் அடைந்த அதிகக் களைப்பினால் அதனை விசாரித்து அறியாது அதன்மீது ஆனந்தமாய்ப் படுத்துக்கொண்டான் 'உடம்பெல்லாம் வலியிருக்கின்றதே! கை கால்களைப் பிடிக்க இளமங்கையர் இப்போதிருந்தால் எவ்வளவு சுகமாகவிருக்கும்!' என்று நினைத்துக் கொண்டிருக்கையில் இரு இளமங்கையர் தனது காலடியில் உட்கார்ந்து பிடித்துக்கொண்டு இருக்கக் கண்டான். அவன் அடைந்த ஆனந்தத்துக்கோர் அளவில்லை. ஆனந்தத்தில் இருப்பவனுக்கு அவர்கள் வந்த அதிசயம் தோன்றுமா? வலி சிறிது குறையவும் பசி உண்டாவதைக் கண்டான். 'என்ன! படுக்கை வேண்டுமென விரும்பினேன். படுக்கை வந்தது. கை கால்களைப் பிடித்து வலி நீக்க இளங் கன்னிகைகளை விரும்பினேன். அவர்களும்கூட இதோ வந்து பிடித்துக்கொண்டு இருக்கிறார்கள். இவையெல்லாம் கிடைத்த போது பசியாறப் பக்ஷணம் வராதா?' என்று அவன் யோசிக்குமுன் அறுசுவையோடு கூடிய அன்ன பதார்த்தங்கள் தனக்கு முன்னால் இருக்கக் கண்

டான். என்ன மாயமாய் இது வந்தது என்பதைக் கருதாது தனது பசியாற அறுசுவை உண்டியை உண்டு, பிறகும் அப் படுக்கையின்மீது சார்ந்தான். அவனுக்கு வேண்டியது இனி ஒன்றுமில்லாமையால் போலும் அன்று தனக்குண்டாகிய அதிசயச் செயல்களைப்பற்றிச் சிந்தித்து மகிழ்ந்து இருக்கும்போது ஏதோ பயத்தினால், 'தற்செயலாய் ஒரு புலி இப்பொழுது வந்தால்...' என்ற எண்ணம் அவனுடைய உள்ளத்தில் எழுந்த உடனேயே, ஒரு பெரிய காட்டுப் புலி அவன் கழுத்தில் பாய்ந்து கடித்து அவனைக் கொன்றுவிட்டது.

இம்மாதிரிதான் உலகத்தவர் எல்லோரும் ஆசாபாசத்தினால் கெடுகின்றார்கள். நீயும் உன்னுடைய தியான காலத்தில் பொருளுக்கும் புகழுக்கும் பிறவற்றிற்கும் விரும்பு வாயானால் அவற்றில் சிலவற்றைப் பெறக் கூடும். ஏன்? கடவுள் விரும்பியபடி கொடுக்கும் கல்பதரு போன்றவர், எதை அடைய ஒருவன் விரும்புவானோ அத் தேவதரு அதனைக் கொடுக்கும். நீ விரும்பியதைப் பெற்று இன்புற்றிருக்கும் போது 'புலி வந்து விட்டால்' என்ற மாதிரி, ஒரு பெரிய பயம் உள்ளத்தில் குடிகொண்டிருக்கும். அந்தப் புலி—நோய், பிணி, சாக்காடு, பொருள், புகழ் போன்ற குறைவுபாடாய், புலியினால் வரும் துன்பத்தினும் பார்க்கப் பன்மடங்கு பெரும் பயங்கரமானதாய் இருக்கும்.

ஆகவே தியானம், பக்தி, ஜபம், சமயாசார ஒழுக்கம் முதலியவற்றால் ஒருவன் மனதினைத் தூய்மைப் படுத்திக்கொண்டு வரும் போது சிறிது சிறிதாக உலக ஆசாபாசங்களை எல்லாம் விட வேண்டும்.



கம்பன் புகழ்*

நா. மகாலிங்கம்,
பி.எஸ்ஸி; எம்.ஐ.இ.

கம்பன் புகழ்பாடிக் கன்னித் தமிழ் வளர்க்கும் என் அருமை நண்பர்களே, தாய்மார்களே, வணக்கம். பொருட் செல்வத்தோடு அருட் செல்வத்தையும் செவிச் செல்வத்தையும் வளர்க்கும் இச் செட்டிநாட்டில் கம்பர் திருநாளில் கலந்து கொள்ளும் வாய்ப்பளித்ததற்காக முதலில் நன்றி கூறுகிறேன்.

காவிரிப்பூம் பட்டினத்தே வாழ்ந்து கடல் வாணிபத்தால் பொருளையும்புகழையும்வளர்த்து வந்த நீங்கள் காவிரிப்பூம்பட்டினம் கடலால் அழிந்ததும தெற்கு நோக்கி வந்து பாண்டி நாட்டின் வெள்ளாறு, வைகையாறுகளுக் கிடைப்பட்ட நிலப்பகுதியை உங்கட்கு வாழ்விடமாகத் தேர்ந்தெடுத்துக் கொண்டீர்கள் என்று வரலாறு கூறுகிறது பெரு மாளிகைகளைச் சங்க இலக்கியங்கள் 'நகர்' என்று குறிப்பது மரபு. நகர் நகரமெனவும் வழங்கும். அவற்றை அமைத்து வாழ்ந்தமையால் உங்கட்கு 'நகரத்தார்' என்று பெயராயிற்று. சங்க காலத்தே யன்றிப் பல்லவர் காலத்துக்குப் பின் உங்கள் புகழ் கடல் கடந்தும் உள் நாட்டில் எல்லை கடந்தும் பரவியது. உங்களைப் போன்றே கம்பரும் சோழவளநாட்டில் தேரழுந்தூரில் தோன்றியவர் என்றாலும், கம்பராமாயண அரங்கேற்றத்திற்குப் பிறகு தன் இறுதிக் காலத்திலே இந்த நாட்டரசன் கோட்டையிலேயே தங்கி விட்டார்ர் என்பதைப் பார்க்கும்போது சடையப்பருக்குப் பிறகு கம்பரை ஆதரித்தவர் நீங்களே என்பது உறுதியாகிறது. ஆகவே கம்பர் திருநாளை இந்த நாட்டார் கொண்டாடுவது பொருத்தமேயாகும்.

நண்பர்களே, உங்கள் முன்னோர்கள் பல்லவர் பாண்டியர் காலம் முதல் பின்னால் சோழப் பாண்டியப் பேரரசர் காலம் முடிய ஏன், அதற்குப் பின்னேயும், 'மணிக் கிராமத்தார்', 'நானாதேசிகன்' முதலிய பெரு வாணிகக் குழுக்களை அமைத்துக் கடல் கடந்து, மலேசியா, இந்தோனேஷியா, சீனம் முதலிய நாடுகளுக்கெல்லாம் சென்ற

* காரைக்குடி கம்பன் விழா தலைமை உரை.

வாணிபம் செய்து பொன்னையும், மணியையும் குவித்த வரலாறு என் நினைவுக்கு வருகிறது. பேரரசர்களைப் போலவே நாடு முழுவதும் கோயில்களைக் கட்டி நிலங்களை நிவந்தம் விட்டு ஆயிரக் கணக்கான மக்களுக்கு வாழ்வும் வளமும் உண்டாக்கியிருக்கிறீர்கள். எங்கள் பொள்ளாச்சிக்கு அருகே உள்ள நல்லட்டிப்பாளையத்தைச் சேர்ந்த பட்டணம் என்ற சிற்றூரும் முன் காலத்தில் உங்களால் அமைக்கப்பட்ட "நானுதேசிகப் பட்டணங்க"ளுள் ஒன்றுதான்.

நம் பண்பாட்டின் சின்னங்கள் பண்டை ஆலயங்கள்; இவற்றைப் பழுது பார்த்துத் திருப்பணி செய்யும் வேலையில் நகரத்தார் முன் நின்றிருக்கிறீர்கள். புதிய கோயில்கள் பலவும் கட்டியிருக்கிறீர்கள். இன்று கம்பருடைய காவியக் கோயிலையும் பழுது பார்த்து மெருகூட்டும் பணியில் 1937 முதல் ஈடுபட்டிருக்கிறீர்கள். கம்பருடைய வரலாற்றை வெளிப்படுத்துவதிலும், கம்ப ராமாயணத்துக்குத் திருத்தமான ஒருபதிப்பை வெளியிடும் முயற்சியிலும் காலத்திற்கேற்றவாறு காப்பிய நயங்களையும் பாத்திரங்களின் பண்புகளையும் திறன் ஆராய்ச்சி நெறியில் ஆராய்வதிலும் காரைக்குடிக் கம்பர் கழகம் இன்று முன் நிற்கிறது. பட்டி மண்டபங்களைத் தோற்றுவித்து இலக்கியவுணர்வை மக்களிடையே பரப்பிய பெருமை சிறப்பாகக் காரைக்குடிக் கம்பர் கழகத்தையே சாரும். கவியரங்குகளும், கருத்தரங்குகளும் கற்றவர் இதயத்திற்குக் களிப்பு ஊட்டுபவை.

மற்றும், பாரி வாழ்ந்த நாடு இது. வள்ளல் அழகப்பர் எண்ணங்கள் வடிவம் பெற்ற ஊர் இது. இத்தகைய வள்ளல்களும் செவிச் செல்வர்களும், கலைச் செல்வர்களும் நிறைந்த இந்நாட்டில் நடைபெறும் கம்பர் திருநாள் மிகவும் சிறப்பு வாய்ந்ததாகும்.

நண்பர் சா. கணேசன் அவர்கள், தமிழ்ப் புலமை பெற்ற கலை நேசர். அருள் நெஞ்சம் படைத்த காந்தீயவாதி. கலைத் துறையில் ரசிகமணி டி.. கே. சி-யின் சீடர். அருட்டுறையில் காந்திய நெறியில் வளர்ந்து தேச விடுதலைப் புரட்சிகளில் கலந்து, இன்றும் மக்களின் விடுதலை மனப்பான்மைக்குப் போரிட்டு வரும் காந்திய தத்துவ போதகர். ராஜாஜி அவர்களின் பிரதம சீடர். கம்பர் நயத்தையும் இலக்கியச் சிறப்பையும் தமிழ் நாட்டிற் பரப்பிய பெரும் பணியில் இவருக்குப் பெரும்பங்கு உண்டு. அத்தகைய நண்பர் திரு. கணேசன் அழைப்புக்கு மிகவும் நன்றி பாராட்டும் கடமையுடையேன்.

காரைக்குடிக் கம்பர் திருநாள் என்றால், தமிழகத்தின் பேரறிஞர்கள் அனைவரையும் அங்கே காணலாம். கலையார்வம் மிக்க, நாடெங்கும் இருந்து வந்துள்ள இரசிகப் பெருமக்களைப் பார்க்கலாம். ஆகவே, இலக்கிய அறிவும் கேள்வி ஞானமும் சமய விளக்கமும் பெற்றுள்ள மக்கள் நிறைந்த அவையிலே தலைமை தாங்க என்னை அழைத்தமைக்கு மிகவும் நன்றி பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன்.

இராமாயணமும், மகாபாரதமும் நமது இதிகாசங்கள். நமது முன்னோர்கள் நமக்கு அளித்துச் சென்றுள்ள ஞானச் செல்வங்களான வேதம் உபநிடதம் முதலிய நூல்களில் உள்ள தத்துவங்களை எளிதில் புரிந்துகொள்ள இவ் இதிகாசங்கள் துணை செய்கின்றன. புராணங்களும் இதற்

காகத் தோன்றியவைகளே. ஆகையால் இவை கூறும் வரலாறுகளை அப்படியே எடுத்துக் கொள்ளக் கூடாது. அவை கூறும் தத்துவங்களையே எடுத்துக்கொள்ள வேண்டும். கந்த புராணம், விஷ்ணு புராணம் முதலியவை இப்படி ஏற்பட்டுள்ளவைகளே. உதாரணமாகப் பாற்கடல் கடைந்த வரலாறு கூறும் தத்துவம் என்ன என்று காண்போம். வள்ளலார் இராமலிங்கர் கூறுவதைக் காண்போம்.

''பாற்கடல் தேங்காய்; அமுதம் அதிலுள்ள நீர்; தேங்காய்ப் பாலிலுள்ள எண்ணெயே விஷம்; எண்ணெயைப் போக்க உபயோகப்படும் முப்பூவே ருத்திரன்.''

இராமாயணமும், பாரதமும் இந்த உலகத்தில் மக்கள் வாழ வேண்டிய வழிமுறைகளை வகுத்துக் காட்டவே சிறந்த காவியங்களாக இயற்றப்பட்டிருக்கின்றன. சில எடுத்துக் காட்டுகளைப் பார்ப்போம்.

இந்தக் காப்பியங்களில் காணப்படாத சிக்கல் எதுவும் மனித வாழ்க்கையில் இல்லை என்றே சொல்லலாம்.

சகோதர பாசத்தை வற்புறுத்துவதில் இராமாயணம் முன் நிற்கிறது. பரதனுக்கு அரசுரிமை தர வேண்டும் என்றது கேட்டவுடன் இராமன் முகம் மும்மடங்கு பொலிவு பெற்றான். ''பின்னவன் பெற்ற செல்வம் அடியனேன் பெற்றதன்றோ?'' என்று கைகேயியிடம் கூறிவிட்டு உடனே காடு போகிறான். பரதன் அண்ணனைத் தேடிக் காடு வந்ததும், பாதுகைகளையே வைத்துப் பதினான்கு ஆண்டுகளும் ஆண்டதும் நமக்குத் தெரியும். இப்படியே இலக்குவனும் சத்துருக்கனும் முறையே இராமனிடமும் பரதனிடமும்கொண்ட பாசத்தை நாம் அறிவோம். சுக்ரீவனும் விபீஷணனும் கூடத் தங்கள் அண்ணன்மாரிடத்தில் அன்பு காட்டுபவர்களாகவே இருக்கிறார்கள். சகோதர பாசம் காட்டுவதில் இராமன் வழி காட்டியதையும், இராவணனும் வாலியும் அதற்கு மாறான முறையில் வழி காட்டி அழிந்து போனதையும் ஒப்பிட்டுக் காட்டுகிறது இராமாயணம்.

இரண்டாவதாக மன்னனாக அரசுக்குத் தசரதன் சிறந்த வழி காட்டியாக இருக்கிறான். விசுவாமித்திரமுனிவர் அவனுடைய உதவியை நாடிவந்தபோது, ''அரசெய்தி இருந்தபயன்பெற்றேன்'' என்று மகிழ்ச்சி காட்டுகிறான். உதவிக்கு இராமனை அனுப்பக் கேட்டபோது, அவன் விரும்பவில்லையானாலும் தான் உதவிக்கு வருவதாகவே கூறுகிறான். கடைசியாகக் குருவான வசிட்டர் சொல்லை மதித்து அவர் சொற்படி இராம-இலக்குமணரை முனிவருடன் அனுப்புகிறான்.

நாட்டு மக்கள் விரும்பியதை மதித்து நடப்பவன் தசரதன். அதனால்தான் அவனை உடம்பு என்றும் மக்களை உடம்பில் நிற்கும் உயிரென்றும் கம்பர் சிறப்பித்தார். அதற்கு முன்னால் வந்த புலவரெல்லாம் ''மன்னன்தான் உயிர்''. ''மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்'' என்று கூறினார்கள். இது முடிமன்னர் ஆட்சிக்கே பொருந்தும். தசரதனே இக்காலத்து நாடாளும் ஜனாதிபதிபோல் விளங்கினான். அதனால்தான் இராமனுக்குப்பட்டம் கட்டும் முன்பு அரசவை கூட்டி மந்திரிமார், குலகுரு, சாதுக்கள், சிற்றரசர் முதலியோர் கருத்துக்களை அறிய முயன்றான்.

மூன்றாவதாக, இராமன் சீதை இருவரது காதலுறவு இறுதி

வரையில் இணைந்து உறுதியோடு நிற்கும் அற்புதந்தான் இராமாயணக் காவியமாக மலர்ந்திருக்கிறது. ''சிறையிலிருந்தாள் ஏற்றம் கூறியது இராமாயணம்'' என்று கூறுவதற்கு அடிப்படை இந்தக் காதலிலேயே அமைந்திருசகிறது. இதில் சிறப்பு என்னவென்றால் ஆண் மகன் கற்பு வற்புறுத்தப்பட்டிருப்பதுதான்.

''இந்த இப்பிறவிக்கு
இரு மாதரைச்
சிந்தையாலும் தொடேன்''

என்று இராமன் தந்த வரத்தை அசோகவனத்தில் இருந்தபோது சீதை எண்ணியிருந்தாள். இராவணன் இதற்கு நேர் மாறு. அதனால் அவன் கடைசியில் அழிந்து போகிறான். இக்கருத்தே நம் சமுதாய வாழ்வுக்கு, குடும்ப வாழ்வுக்கு வழிகாட்டியாக அமைந்திருக்கிறது. இதனோடு இன்றைய சட்டங்களை ஒப்பிட்டுப்பார்த்தால் இச்சட்டங்களை— விவாகரத்துபற்றியசட்டங்களை— சமுதாயம் மதிப்பு அளிக்காத நிலை எந்த அளவுக்கு நியாயம் என்பது புலப்படும்.

நான்காவதாக, உறுதிமொழி காப்பாற்றுதல் என்பது சமுதாயத்தின் நன்மைக்கும் வளர்ச்சிக்கும் இன்றியமையாதது. எப்பொழுதோ கொடுத்த வரத்தைக் கேட்ட கைகேயிக்குத் தன் விருப்பத்திற்குமாறாக இராமனைக் காட்டுக்கு அனுப்பவும் இசைகிறான் தசரதன் அதற்குத் தன் உயிரையே பணயம் வைக்கிறான்!

வாலியிடமிருந்து தன்னைக் காப்பாற்றுமாறு அபயம் புகுந்த சுக்கிரீவனுக்காக வாலியைக் கொன்று அவனுடைய தாக்குதலுக்கு ஆளாகிறான் இராமன். பகைவனிடமிருந்து வந்த விபீஷணனைச் சேர்த்துக் கொள்ளக் கூடாது என்று துணைவர் எல்லாரும் கூறியும் அடைக்கலம் புகுந்தவரைக் காக்கும் தன் உறுதியை இராமன் நிறைவேற்றுகிறான். விபீஷணன் தனக்குத் துரோகம் இழைத்தாலும் சரி என்பது அவன் முடிவு. அதனால் இலட்சுமணனோ விபீஷணன் மேல் இராவணன் எறிந்த வேலைத் தான் தாங்கிக்கொண்டு அந்த உறுதிமொழியைக் காப்பாற்றுகிறான்.

பதினான்கு ஆண்டுகளும் கழிந்த மறுநாளே அயோத்தியில் இருப்பதாகப் பரதனுக்குக்கூறிய உறுதிமொழியைக் காப்பதற்காக இராமன் புஷ்பக விமானம் ஏறிப் புறப்படுவதோடு நில்லாமல் அனுமனை முன்னால் அனுப்பிப் பரதனைத் தீப் புகாமல் தடுக்கிறான்.

இனி, மனித வாழ்விலே ஏற்படக்கூடிய தர்மசங்கடமான சில நிலைமைகளை உருவாக்கி அவற்றை எப்படிச் சமாளிப்பது என்ற முறையில் இராமாயணத்தின் சில நிகழ்ச்சிகளைக் காண்கிறோம்.

அவற்றுள் வாலி வதை ஒன்று. தன்னை விசாரிக்காமல் ஒரு தலைப்பட்சமாக நின்று கொன்றான் என்பதும், மறைந்து நின்று அம்பு எய்தான் என்பதும் இராமன் கூறும் மனுதர்மம் குரங்குகளாகிய தமக்குப் பொருந்தாது என்பதும் வாலியின் குற்றச்சாட்டு. மனிதர் விலங்கு எல்லாருக்கும் அறம் ஒன்றேதான் என்பது இராமனது வாதம். மறைந்து நின்று கொன்றதற்கான காரணத்தை இலக்குவனே கூறும்படி கம்பர் அமைத்திருக்கிறார். இராமனுக்கு இது ஒரு தர்மசங்கடமான நிலைமைதான். இதற்கான தகுந்த காரணத்தை ஆராயும்படி ஆராய்ச்சி [இலக்கியத்திறன்] யாளர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

தசரதனுடைய புத்திர சோகத்தை விளக்கும் கட்டமும் அப்படிப்பட்டதுதான். வரத்தைக் கொடுத்துவிட்ட பிறகு இராமனைக் கானகம் அனுப்ப மனம்கொள்ளாமல் கைகேயியை எப்படியெல்லாமோ கேட்டுப் பார்த்தும் பலன் ஏற்படவில்லை. அதனால் அவன் மனம் முறிந்து மரணப்படுக்கையில் விழுகிறான். எப்படியாவது இராமனை வனம் புகாமல் செய்வதாக வசிட்டன் கூறியபோது அது நடக்காது, நடக்கக்கூடாது என்று தெரிந்தும் புத்திர சோகத்தால் மனம் தடுமாறி இசைகிறான். இராமன் காடு செல்வதைத் தவிர்க்க வசிட்டர் செய்த முயற்சி வெற்றி பெற்றால் சத்தியம் பொய்த்து விடாதா? இராமன் தந்தைக் கேற்ற புதல்வனாக அவனுடைய உறுதியைக் காற்பாற்றுவதனால் தர்மசங்கட நிலை தவிர்க்கப்படுகிறது.

இதேபோல் விபீஷணன் இராமன் பக்கம் நின்று அரக்கர் மாயங்களை எல்லாம், சூழ்ச்சிகளை எல்லாம் அவ்வப்போது வெளிப்படுத்தி இராமனுக்கு வெற்றி தேடித் தருகிறான். நிகும்பலை யாகம் விபீஷணனால் தடைப்பட்டதை அறிந்ததும் இந்திரசித்தன் பெருங் கோபம் கொண்டு சிறிய தந்தையைப் பலவாறு பழிக்கிறான்; காட்டிக் கொடுத்தான் என்று ஏசுகிற இந்திரசித்தன்,

''இனி உனக்கு என்னோ மானம்?
எங்களோடு அடங்கிற் றன்றே''

என்கிறான். விபீஷணனோ,

''அறம் துணையாவது அல்லால்
அருநரகு அமைய நல்கும்
மறம் துணையாக மாட்டேன்''

என்று அஞ்சாமல் பதில் தருகிறான்; புகழ் தனக்கு வேண்டாம் என்றும் சத்தியம் வென்றால் போதும் என்றும் பேசுகிறான். காட்டிக் கொடுப்பவனெல்லாம் விபீஷணன் ஆகிவிட முடியுமா? இதனை ஏனைய உலக நாடுகளின் நிகழ்ச்சிகளில் வைத்து நடு நின்று ஆராய வேண்டும்.

கம்பராமாயணத்தால் கம்பர் வாழ்ந்த காலத்து நாகரிகத்தை நாம் சிறிது அறிகிறோம். ஒன்றிரண்டு பார்க்கலாம்.

காதலே கற்புக்கு அடிப்படை என்பதைச் சீதையும் இராமனும் வில்லை முறிப்பதற்கு முன்னமே காதல் கொண்டதாகக் கம்பர் கூறி விளக்குகிறார். வில்லை முறித்த இராமன் தான் தெருவில் கண்ட தன் காதலனாக இல்லாவிட்டால் உயிரைத் துறந்து விடுவதாகச் சீதை உறுதி செய்து கொண்டாளாம். இது தமிழகத்தின் பண்பாடு.

கற்புடைய மகளிர் தம்மைப் பிறர் தீண்டினாலும் உயிர் வாழார் என்பது தமிழ் மரபு. அதனால்தான் பர்ணசாலையோடு இராவணன் சீதையை எடுத்துச் சென்றதாகக் கம்பர் மாற்றினார். வாலியின் மனைவி தாரையும் வாலி இறந்த பின்னர் சுக்கிரீவனுக்கு மனைவியாகிவிடாமல் கைம்மைத் துறவு பூணுகிறாள். மறுமணத்திற்குத் தமிழகத்தில் இடமில்லை. மேலும் ஆந்த்ரோபாயிடு ஏப்ஸ் (Anthropoide Apes) என்ற குரங்கினம் வாழ்வில் ஒரே முறைதான் காதலிக்கிறது என்பது விஞ்ஞானிகளின் முடிவு. கம்பன் கற்பனை விஞ்ஞான உண்மையாகிறது!

கம்பனுடைய நாட்டுப் படலமும் நகரப்படலமும் அக்காலத்து நாட்டையும், நகரத்தையும் நமக்குக் காட்டுகின்றன. இசையும் நாடகமும் சிற்பமும் ஓவிய

மும் தமிழகத்தில் நிறைந்து இருந்தன என்பதற்குக் கம்பரது காவியம் ஒரு சிறந்த எடுத்துக் காட்டு. கம்பருடைய அரசியல் கருத்துக்கள் வருங்காலப் புரட்சிகளுக்கு வித்துக்களே என்பதை இன்று உணர்கிறோம்.

காவியம் என்ற முறையில் இது உலகமகா காவியங்களுக்குள்ளே ஈடும் இணையும் அற்று விளங்குகிறது என்று வ. வே. சு. ஐயர் அவர்கள் தன் 'கம்பராமாயண ரசனை' என்ற நூலில் விளக்கியுள்ளார்கள். அவர் ஒப்பிட்ட பிற மொழிக் காவியங்கள் கிரேக்க ஈனியட், லத்தினிலுள்ள வர்ஜீலின் ஈனியட், வால்மீகி இராமாயணம் முதலியவை. இந்த உண்மையை எதிர்காலத்தில் உலகமக்கள் அனைவரும் உணர்வார்கள் என்று நம்பலாம். ஏனெனில் கம்ப இராமாயணம் ஐ. நா. வின் ஆதரவில் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டு வருகிறது.

கம்பராமாயணம் விசேட காலங்களில் மக்களால் ஓதப்பட்டு வருவதே இந்தக் காப்பியம் மக்களிடையே பெற்றுள்ள செல்வாக்குக்குச் சிறந்த சான்றாகும்.

இராமாயணக் கதையானது இந்தியாவில் பல மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது. கம்பரை அடுத்து வங்காளியில் கிருத்திவாசமும், இந்தியில் துளசிதாசரும் இராமாயணம் இயற்றினார்கள். பின் பல மொழிகளில் ஆதிகாவியமாக இராமாயணமே இயற்றப்பட்டிருக்கிறது. அண்மையில் கம்பராமாயணத்தை பூதலப்பட்டு ஸ்ரீராமுலு என்பவர் தெலுங்கில் காவியமாக மொழி பெயர்த்ததும், கம்பர்கழகம் பொன்னாடை போர்த்து அவரைக் கௌரவித்ததும் அனைவரும் அறிந்த உண்மை.

அன்பர்களே ஒரு சில யோசனைகளை மட்டும் உங்கள் முன் வைத்து என் உரையை முடிக்க விரும்புகிறேன். கம்பராமாயணத்தைக் கம்ப சித்திரம் என்றும், கம்ப நாடகம் என்றும் போற்றிப் புகழ்கிறார்கள். அவர் கூறும் வருணனைகளை அப்படியே வெளிப்படுத்தக்கூடிய முறையில் சிற்பங்களும் ஓவியங்களும் உண்டாக்க வேண்டும். அப்படிப்பட்ட கம்ப சித்திரக் கோயில்களை— சிற்பக் கோயில்களைச் சமைத்து அங்கே கம்பர் திருநாள் நடத்த வேண்டும் என்பது என்னுடைய ஆவல். அதோடு கம்பர் அமைத்திருக்கும் நிகழ்ச்சிகளையும் உரையாடல்களையும் சிறிதும் மாற்றாமல் நாட்டிய நாடகங்களாகவும், நடிகர் குழு நாடகங்களாகவும் ஓரங்க நாடகங்களாகவும், தனியொருவர் நடிப்பு (Monologue) நாடகமாகவும் பாடல்களின் பின்னணியுடன் நடிக்கும் மௌன நடிப்பு (கதகளி) நாடகமாகவும் நடிக்க வேண்டும். நல்ல பாடல்களை இசையூட்டிப் பாடி இசை அரங்குகள் நடத்த வேண்டும்.

ஷேக்ஸ்பியர் நாடகங்களைச் செய்யுளாக அப்படியே நடிப்பதைப்போலவே கம்பராமாயணத்தையும் ஒருவர்கூட மாற்றாமல் அப்படியே நடிக்கலாம் என்பதைக் கம்பராமாயண ரசிகர்கள் அனைவரும் அறிவர். உதாரணமாகக் குகனுடைய கோபாவேச மொழிகளைக் கூறலாம்.

''ஆழ நெடுந்திரை ஆறு
கடந்திவர் போவாரோ?
தோழமை என்றவர்
சொல்லிய சொல்
ஒரு சொல் அன்றோ?''

கடைசியாக ஒன்று: இராமாயணத்தில்தான் இமயம் முதல் இலங்கை வரை பரந்து கிடக்கும் இந்தப் பாரத நாட்டைப் பார்க்கிறோம். அப்பரந்த பார்வை, கம்பருக்குப் பலவகை நிலப்பகுதிகளையும் மக்களையும் வருவிப்பதற்கும் கலைத்திறனை வளர்ப்பதற்கும் நல்ல வாய்ப்புக் கொடுத்தது. மேலும், தேசிய ஒற்றுமைச் சின்னமாக—தேச மக்கள் எல்லாருடைய பண்பாட்டுக்கும் சின்னமாக—விளங்குவதால் இராமாயணம் நமது நாட்டிற்குத் தேசிய காப்பியம் ஆகும். இந்தத் தேசிய காப்பியத்திற்கு மேலே நான் கூறியபடி சித்திரங்களும், சிற்பங்களும் கொண்ட காப்பிய மாளிகை கம்பன் மாளிகை என்ற பெயரால் தோன்ற வேண்டும். அதற்கான பணியில் கம்பர் கழகம் ஈடுபடும் என்பது என் நம்பிக்கை. எம் பங்கும் பணியும் இதில் இருக்கிறதென்று கூறத் தேவையில்லை.

''கம்பன் புகழ் பாடிக்
கன்னித் தமிழ் வளர்ப்போம்''

என்ற உறுதியுடன் என் உரையை முடிக்கின்றேன்.

உ

திருச்சிற்றம்பலம்

எல்லாம் சிவன்செயல் என்றறிந்
    தால்அவன் இன்னருளே
அல்லாற் புகலிடம் வேறுமுண்
    டோ! அது வேனிலையா
நில்லாய்டன் னுல்தமி யேற்குக்
    கதியுண்டிந் நீள்நிலத்தில்
பொல்லா மயக்கத்தில் ஆழ்ந்தாவ
    தென்ன புகல் நெஞ்சமே.

ஆடுங் கறங்கும் திரிகையும்
    போல அலைந்தலைந்து
காடும் கரையும் திரிவதல்
    லால்நின் கருணைவந்து
கூடும் படிக்குத் தவமுய
    லாத கொடியர் எமன்
தேடும் பொழுதென்ன செய்வார்
    பரானந்த சிற்சுடரே.

—தாயுமானுர்

வெளியிடுபவரும், ஆசிரியரும் இராம. மணிமேகலை, 4, தணிகாசலம் செட்டி ரோடு, சென்னை-17. அச்சிடுபவர்: தொண்டர். காசி. சீதாராமன், ராமன்ஸ் பிரிண்டிங் பிரஸ், 81-5, பாண்டி பஸார், தியாகராயநகர், சென்னை-17.

ஓம்

அருள்

மாத இதழ்

விலை 30 காசு

ஆசிரியர்:
திருமதி
தமிழ்வாணன்





தென்னாட்டில் சிறந்
தெய்விகப்பத்திரி

அருள்

தமிழ் மாத முதல் நாள் வெளிவருகிறது

இந்த இதழில்

அருள்-2 ஆகஸ்ட்

கருணை-11 15-8-68

ஆவணி, கீலக விலை: 30 காசு

நன்றி

கலைச்செல்வி
மணிமேகலை

''எந்நன்றி கொன்றார்க்கும்
உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற
மகற்கு.''

இந்தக் குறளை அடிக்கடி நினைவுபடுத்திக் கொள்வதுண்டு. நாம் வளர நமக்கு எவ்வளவோ பேர் உதவி செய்திருக்கிறார்கள். இப்போதும் செய்து வருகிறார்கள் பெற்றவர், வளர்த்தவர், ஆசிரியர், உற்றார் உறவினர் எனப் படிப்படியாக மற்றவர்களது உதவி பெற்று நாம் வளர்ந்திருக்கிறோம். நம்மில் எத்தனை பேருக்கு இம்மாதிரி எண்ணம் இருக்கும் என்பதை விரல் விட்டு எண்ணும் அளவுக்கு விசுவாச உணர்ச்சி பரவலாகக் குறைந்து காணப்படுவதைப் பார்க்கும்போது என் மனம் வேதனைப்படுவது உண்டு.

பணத்திற்கு மதிப்புக் கொடுக்கும் அளவுக்குக் குணத்திற்கு மதிப்புக் கொடுப்பதும் இல்லை. ஒரு விழாவிற்குச் சென்றால் ஆடை அணிகலன்களைப் பார்த்து உபசரித்து உட்கார வைக்கும் நபர்கள், ஏழை எளியவர்களை உதாசீனம் செய்வதை நாம் கண்கூடாகக் காண்கிறோம். பணத்திற்கும் பதவிக்கும் தரப்படும் மதிப்பு நட்சத்திரங்களுக்கும் ஒரு படி மேலாகவே தரப்படுகிறது. அவர்களுக்கும் ராஜோபசாரம்தான் நடக்கிறது. உழைப்பாளிகளையும் பாட்டாளிகளையும் கவனிக்க வேண்டியது அவசியம். எதிர்கால இந்தியா உலக அரங்கில் சிறப்படைய இது ஒரு நல்ல வாய்ப்பாக அமையும்.

வளரும் பெண்கள் சமுதாயத்திற்கு ஒரு வழி காட்டியாக விளங்கிய சகோதரி உயர்திரு முத்துலெட்சுமி ரெட்டி அவர்களின் மறைவு நமது நாட்டுக்கு ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும். ஆவது பெண்ணாலே என்பதற்கு ஓர் உதாரணமாக ஒரு வீராங்கனையாக விளங்கிய அவர் நினைவு, மக்கள் மனதில் என்றும் பசுமையோடு இருக்கும். அவரது ஆன்மா சாந்தி பெறுவதாக.

''பிறப்பொக்கும் எல்லா
உயிர்க்கும் சிறப்பொக்கும்
செய் தொழில்
வேற்றுமையால்.''

பிறந்தவர்கள் என்றாவது ஒரு நாள் இறந்தேயாக வேண்டும். பிறவிப் பயனைப் பெற நாம் சில நல்ல காரியங்கள் செய்வது நம் கடமையாகிறது. பிறக்கும் போதே யாரும் மகாத்மாவாகப் பிறக்கவில்லை வாழ்ந்து காட்டிய மகான்களின் அடிச்சுவட்டைப் பின்பற்றி நாமும் உயர்ந்தவர்களாக வாழ முயற்சி செய்வோம். புனிதமான பாத யாத்திரையை மேற்கொண்டிருக்கும் வினோபாஜி நம் போற்றுதலுக்கு என்றும் உரியவர். நமது நாட்டுக்கும் மக்களுக்கும் அவர் செய்திருக்கும் மகத்தான சேவைகள் அளவிடற்கரியது.

'தெய்வம் மனுஷ்யாள் ரூபணே' என்று பெரியோர் சொல்வர். அத்தகைய மனிதர்களை நாம் நம் வாழ்வில் கண்டறிவதோடல்லாமல் அவர்களைப் பின்பற்றி நடந்து நல்ல முறையில் செயலாற்ற எல்லாம் வல்ல பரம் பொருள் அருள் பாலிப்பதாக. ○



ஸ்ரீ ஆண்டாள் வைபவம்

சாண்டில்யன்

ஸ்ரீ ஆண்டாள் திருப்பாவை 'வேதமனைத்துக்கும் வித்து' என்று வேதப்பிரான் பட்டர் சொல்லுகிறார். வேதமனைத்துக்கும் வித்தானது பிரணவம். ஓங்கார ப்ரணசவாவேதா என்பது பிரமாணம். அப்பேர்ப்பட்ட ஓங்காரத்தைத் தனது கர்ப்பத்தில் கொண்டதாலும், ஓங்கார விஸ்தரிப்பான வேத, உபநிஷத் அர்த்தங்களை தெளிவுற விளக்குவதாலும் ஸ்ரீ ஆண்டாளுடைய திருப்பாவையும், நாச்சியார் திருமொழியும் தமிழ் மொழியில் ஈடு இணையற்ற நூல்களாகக் கருதப்படுகின்றன. அவற்றைப் பிராம்ம முகூர்த்தத்தில் அதாவது விடியற்காலையில் சொல்லுவதால் வேதம் சொல்லும் பலன் உண்டு என்பதும் ஆன்றோர் கருத்து

வேத உபநிஷந்துக்களுக்கும் ஸ்ரீ ஆண்டாளின் சிறப்பு நூல்களுக்கும் ஒரு வேறுபாடு உண்டு. வேதங்களை ஓதும்போது ஸ்வர விபரீதமில்லாமல் குறிப்பிட்ட வரம்புக்குட்பட்டு குறிப்பிட்ட ஒலிகளில் ஓதவேண்டும். இன்னார் ஓதலாம் இன்னார் ஓதக்கூடாது என்ற விதியும் உண்டு. ஆனால் வேத உபநிஷத் சாரமான ஸ்ரீ ஆண்டாளின் திருப்பாடல்களுக்கு அந்தவிதம் கட்டுப்பாடுகள் கிடையாது. யாரும் பாடலாம், எப்படியும் பாடலாம். யார் பாடினாலும் எப்படிப் பாடினாலும் இகபர சௌக்யங்களுக்குக் குறையேதுமில்லை.

குறிப்பிட்ட இனத்தாருக்கு ஓதுக்கப்பட்ட வேதங்களை உலகம் முழுதும் அநுபவிக்கத் தமிழில் ஆக்கித் தந்தார்கள் ஆழ்வார்கள். அவர்களில் தலைமையாக விளங்குபவர் ஸ்ரீ ஆண்டாள். அத்தகைய பரம கிருபையுடன் இவ்வுலகை நோக்கி ஆண்டவனையும் நோக்கிய ஸ்ரீ ஆண்டாளின் பிறந்த நாள் உலகுக்கு நன்னாள்.

அந்த நன்னாளிலும் ஒரு விசேஷம் உண்டு. ஸ்ரீராமபிரான் என்று பிறந்தார் என்பதில் கருத்து வேறுபாடு உண்டு.

ஸ்ரீ ஆண்டாள் ஜனன விசேஷத்தில் அத்தகைய வேறுபாடுகள் இல்லை.

ஸ்ரீ ஆண்டாள் பிறந்த திருவாடிப்பூரம் உலகத்துக்கு நலம் தரும் நாள் அவள் நாமம் நலந்தரும் சொல். இரண்டையும் எண்ணி உலகு உய்யட்டும். ○

அருள் நெறித் தலைவர்

மகாலிங்கம்



திரு நா. மகாலிங்கம் (பி.எஸ். ஸி. எம். இ. ஸி.) புகழ்பெற்ற பொள்ளாச்சி திரு நாச்சிமுத்து கவுண்டரின் ஒரே புதல்வர். புதுக்கல்வியிலும் பொறியியல் கல்வியிலும் பட்டங்கள் பெற்றுத் தம் தந்தைக்குப் பின் பல புதுத் தொழில்களைத் தமிழகத்தில் அமைத்து இன்று தமிழ் நாட்டில் தலைசிறந்த தொழில் அதிபராக விளங்குகிறார்.

திரு மகாலிங்கம் பொள்ளாச்சியில் சக்தி நூல் ஆலையையும் ஆப்பக்கூடலில் சக்தி கரும்பாலையையும் சென்னையில் சக்தி இரும்பாலையையும் நிறுவி, தமிழகத்தின் மிகச் சிறந்த ஏ. பி. டி. போக்குவரத்து நிறுவனத்தையும் இயக்கும் அதிபராகவும் இருந்து வருகிறார். இவருடைய நிறுவனங்கள் தமிழகமெங்கும் பரவியிருக்கின்றன. இந்தியாவில் செயற்கை வைரங்கள் செய்யும் ஒரு தொழிற்சாலையை மேட்டுப்பாளையத்தில் அமைத்துள்ளார். இதுபோன்ற ஒரு நிறுவனம் இந்தியாவில் வேறெங்கும் இல்லை. பலமுறை மேல் நாடுகள் சென்று நுண் அறிவும் பொறியியல் அறிவும் பெற்றுள்ள இவர் அருள் துறையில் ஒரு பெரும் இயக்கத்தின் தலைவராகவே திகழ்கிறார். அருள்ஜோதி ராமலிங்கர் பணி மன்றம் இவர் தம் தலைமையில் சென்னையில் இயங்கி வருகிறது. அண்மையில் 20 லட்சம் ரூபாய் செலவில் ராமலிங்கருடைய ஸ்தாபனம் ஒன்றை வடலூரில் அமைக்கத் திட்டம் தீட்டி அரசினரின் அனுமதியைக் கோரியுள்ளார். ராமகிருஷ்ண தேவரிடம் இவருக்கு பெரும் மதிப்பு உண்டு. அந்த முறையிலேயே ராமலிங்கர் பணி மன்றம் அமையவேண்டுமென்பது இவரது அவா.

அறப்பணிகள்

தமிழ் நூல்களைப் பழுதறப் பயின்று பள்ளியில் வடமொழி கற்று இந்நாட்டின் பாரம்பரியம் முழுவதையும் காந்தியக் கண்ணோட்டத்தில் இணைத்து நிற்பவர். இவர் ஆற்றியுள்ள அருட்பணிகளில் பவானி சங்கமேஸ்வரர் ஆலயத்திற்கு ரூ. 1 லட்சம் நன்கொடை வழங்கியதும், பொள்ளாச்சி வெள்ளித்தேர் வெள்ளோட்டத்திற்கு ரூ. 1 லட்சம் வழங்கியதும் குறிப்பிடத்தக்கவை.

கல்விப் பணிகள்

இவர் பல கல்விக்கூடங்களையும் கல்லூரிகளையும் நிறுவி நடத்தி வருகிறார். பொள்ளாச்சி நாச்சிமுத்து பாலிடெக்னிக், பொள்

ளாச்சி மகாலிங்கம் கலைக்கல்லூரி கோவை தமிழ்க் கல்லூரி போன்றவைகள் இவர் தம் முயற்சியால் வளர்ந்தவை.

கல்வி, அரசின் ஆதிக்கத்தின் கீழ் இருக்காமல் கல்வித்துறையில் ஆக்கம் பெற்ற ஒரு கார்ப்பரேஷனின் தலைமையில் இயங்க வேண்டும் என்பதும், காந்திய அடிப்படையில் கல்வி போதிக்கப்படவேண்டும் என்பதும் இவரது குறிக்கோளாகும்.

காந்தீயத்தில் பற்று

இவர் உலக மெங்கும் காந்தீயம் பரவுவதற்கு விழைபவர். காந்தீயம் அறநெறியாம் அகிம்சையும் சத்தியமும் காந்தீயப் பொருளாதாரங்களாகிய குடிசைத் தொழில், கதர் இன்னும் பல கிராமத் தொழில்கள் இயங்கினால்தான் நாட்டில் இன்றுள்ள நிலை மாறும் என நினைப்பவர். தமிழகத்தில் கைத்தறி பெற்றுள்ள இடத்தைப் பழுது படாது காத்துப் பேணவேண்டும் எனக் கருதுபவர். பல திட்டங்கள் தீட்டியும் நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டம் பெருகி நாட்டில் மக்கள் அவதியுறுவதற்குக் காரணம் நாம் அவற்றைக் காந்தீய அடிப்படையில் அமைக்கத் தவறியதே என்னும் எண்ணம் கொண்டவர்.

அரசியல்

சென்ற 15 ஆண்டுகளாகக் கீழ் சட்டசபையில் உறுப்பினராக இருந்து அரசியல் ஞானம் பெற்றவர். இன்றும் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியில் உறுப்பினராக இருப்பவர்.

நமது அரசியல் காந்தீய கண்ணோட்டத்தில் இயங்கவில்லை என்றும், அடித்தளத்தில் இருப்பவர்கள் நன்மைபெறவில்லை என்றும், ஏற்றத் தாழ்வுகள் நீங்கவில்லையென்றும், பொதுத்துறையும் ஒன்றுக்கொன்று அரண் செய்யும் வகையில் அமைக்கப்பெறாது சிந்தாந்த சொற்களைச் சொல்லி வாயளவில் கோஷங்களை எழுப்புவதால் நாட்டுக்கு நன்மை வராது என அனுபவத்தால் அறிந்து சொல்பவர். ஜனநாயகத்தில் கீழ்மட்டத்தில் இருக்கின்ற சாதாரணத் தொண்டனுக்கும் பேச்சுரிமையும் சட்டத்தில் வழங்கப்பட்டிருக்கிற ஜீவாதார உரிமையும் வழங்கப்படவேண்டும் என்றும் அரசியலில் கொள்கைகளுக்குத்தான் உயர்வு தவிர தனிப்பட்ட மனிதர்கள் எவ்வளவு உயர்ந்தவர்களானாலும் அவர்கள் அக் கொள்கைகளுக்கு உட்பட்டே நடக்க வேண்டுமென்றும் அஞ்சாது அடித்துப் பேசும் அரசியல்வாதி! ○

பழக்க வாசனையின் பரமசக்தி



பகவான்
ஸ்ரீ இராமகிருஷ்ண
பரமஹம்ஸர்

ஒருநாள் ஓரூரில் சாயங்காலச் சந்தையொன்று கூடிற்று சில செம்படவப் பெண்கள், தாம் கொண்டு வந்த மீனை அங்கு விற்று விட்டு வீட்டிற்குத் திரும்பிப் போய்க்கொண்டிருந்தனர். முன்னிருட்டு வந்து விட்டது. மழையோ பாட்டம் பாட்டமாகப் பெய்யத் தொடங்கியது. பாவம்! அவர்கள் என்ன செய்வார்கள்? பக்கத்தில் பூக்கடைக்காரனுடைய குடிசை இருப்பதைப் பார்த்து அங்கு ஓடினர். அந்தப் பூக்கடைக்காரன் மிகவும் நல்லவன். அவன் அங்கு வந்த அப் பெண்களின் பரிதாபகரமான நிலையினைக் கண்டு தனது வீட்டின் ஓர் அறையைக் காட்டி, வேண்டுமானால் அன்று தங்கவும் அதனை உதவினான். அவர்கள் மிகவும் மகிழ்வுடன் ஏற்று அவ்வறைக்குள் சென்றனர். அந்த அறை கமகம வென்று நறுமணம் வீசியதைக் கண்டு, நாலு பக்கமும் பார்த்தார்கள். ஒரு மூலையில் சில பூக்கூடைகள் வைக்கப் பட்டு இருந்தன அவை, வாடிக் கையாகக் கொடுக்கும் சிலருக்கு மறுநாள் காலையில் கொடுப்பதற்காகவே அங்கு வைக்கப்பட்டன. ஆனால் மீன் வாசனையோடு பழகியவர்களுக்கு நறுமணம் வீசும் வாசனை எப்படிப்பிடிக்கும்? அது மட்டுமல்லாமல் ஒருகால் கண்மூடி விழிக்கவும் முடியாததாயிருந்தது. அவர்களுள் ஒரு புத்திசாலிப் பெண் மற்றவர்களைப் பார்த்து ஒரு யுக்தி சொன்னாள். நமக்குத் தூக்கமோ வருவதாய் இல்லை. இந்தப் பூக்கூடைகளை எடுத்து வேறிடத்து வைக்கவோ முடியாது. நம்மிடத்திலுள்ள மீன் கூடைகளின்மீது கொஞ்சம் ஜலம் தெளித்து நமது பக்கத்தில் வைத்துக் கொண்டால் அப் பூக்கூடைகளால் உண்டாகும் கஷ்டம் நீங்கும் என்றாள். யாவரும் அந்த யோசனையை ஏற்று அப்படிச் செய்தனர். உடனே எல்லாப் பெண்களும் குறட்டை விட்டுத் தூங்கிவிட்டனர்!

பழக்க வாசனையின் பரம சக்தி இப்படிப்பட்டதுதான்! உலக ஆசாபாச எண்ணத்தோடும் வாழ்வோடும் கூடியவர் பரிசுத்த பற்றற்ற தன்மைகளையோ, தலங்களையோ நாடினாலும் அமைதிக் குறைவு சுகக்குறைவு முதலியவற்றோடு கூடியவர்களாய்த்தான் இருப்பார்கள்! ○

ஆப்ரஹாம்

லிங்கனும்

தாடியும்

பிரபல அமெரிக்க ஜனாதிபதி ஆப்ரஹாம் லிங்கனின் படத்தை தாடியின்றி யாரும் பார்த்ததாக நினைவு இல்லை. லிங்கன் என்றதும் அவர் தாடியுடன் உள்ள உருவம் தான் எல்லோருக்கும் நினைவு வரும். இந்தத் தாடிக்குள் ஒரு சிறிய கதையே மறைந்திருக்கிறது!

லிங்கன் முதலிலிருந்தே தாடி மீசையுடன் காணப்படவில்லை. உண்மையில் அவர் நான்கே வருடங்கள் தாம் தாடி வளர்த்திருந்தார். இந்த நான்கு வருடங்களில்தாம் இவர் பெரும் புகழ் பெற்றார்!

தாடியில்லாத லிங்கனின் படத்தை 11 வயது நிரம்பிய ஒரு பெண் வாங்கினாள். அந்தப் பெண்ணின் பெயர் க்ரேஸ்பீடல். இந்தப் பெண் லிங்கனின் படத்தை விளக்கின் வெளிச்சத்தில் உற்றுப் பார்த்தாள்.

லிங்கனின் முகம் ஒல்லியாக இருந்தது. கன்னங்களில் குழிகள் விழுந்திருந்தன. விளக்கின் வெளிச்சத்தில் பார்த்தபோது தற்செயலாகப் படத்தின் மீது நிழல்கள் விழுந்தன, தாடிபோல்! அப்போது லிங்கனின் உருவம் பார்க்க நன்றாக இருந்தது. உடனே அந்தப் பெண் லிங்கனுக்குக் கடிதம் எழுதினாள்.

லிங்கன் தாடி மீசையுடன் இருந்தால், பெண்களுக்கு லிங்கனை மிகவும் பிடிக்கும் என்றும், பெண்களுக்குப் பிடித்து விட்டால், அவர்கள் வீட்டில் உள்ள ஆண்களையெல்லாம் லிங்கனுக்கே ஓட்டுப் போடும்படி விரட்டுவார்கள் என்றும், லிங்கன் இதனால் சுலபமாக ஜனாதிபதியாக முடியும் என்றும் எழுதினாள் க்ரேஸ்!

இவள் யோசனையை ஏற்றுத் தான் லிங்கன் தாடி மீசையை வளர்த்தார். தேர்தலில் வெற்றி பெற்று ஜனாதிபதியானார்!

தாடி வளர்க்கும்படி சொன்ன அந்தப் பெண்ணை லிங்கன் கடைசிவரையில் மறக்கவில்லை! மறக்க முடியவில்லை!



உ

திருச்சிற்றம்பலம்

பாசம் பரஞ்சோதிக்
    கென்பாய் இராப்பகல் நாம்
பேசும்போ தெப்போதிப்
    போதார் அமளிக்கே
நேசமும் வைத்தனையோ
    நேரிழையாய் நேரிழையீர்
சீசி இவையும்
    சிலவோ விளையாடி
ஏசு மிடம்ஈதோ
    விண்ணோர்கள் ஏத்துதற்குக்
கூசு மலர்ப்பாதம்
    தந்தருள வந்தருளும்
தேசன் சிவலோகன்
    தில்லைச்சிற் றம்பலத்துள்
ஈசனார்க் கன்பார்யாம்
    ஆரேலோர் எம்பாவாய்.

—மாணிக்கவாசகப் பெருமான்

நல்லவைகளையே நினைக்க வேண்டும்

வாழ்க்கையில் வெற்றி பெற, மகிழ்ச்சியுடன் இநக்க எப்போதும் நல்லவைகளையே நினைக்க வேண்டும். கெட்டவைகளை நினைக்கவே கூடாது.

எதிர்காலம்எப்படியிருக்குமோ என்று எண்ணிப் பயப்படுகிறவர்கள் எதிர்காலத்தைப் பற்றி நினைக்கவேவேண்டாம். இன்றையப்பொழுதை, இருபத்துநான்கு மணி நேரத்தை மகிழ்சசியுடன் கழிக்க நினைக்கவேண்டும். இப்போது நாம் செய்யும் வேலைகளை ஒழுங்காகச் செய்ய வேண்டும்.

சிலருக்கு மற்றவர்களுடன் இருக்கும்போது, மற்றவர்களுடன் பேசும்போது, மற்றவர்களுடன் வெளியே போகும் போது மட்டுமே மகிழ்ச்சியாக இருக்கும், உற்சாகமாக இருக்கும். தனிமையில் இருக்கும் போது தம்மால் எதுவும் முடியாது என்று பயமாக இருக்கும். உற்சாகம் குறையும். முதலில் இப்படிப்பட்ட அச்சத்தைப் போக்க வேண்டும். மனத்தில் எப்போதும் துணிவை வரவழைத்துக் கொள்ள வேண்டும்.

சிலர் மற்றவர்களை நம்புவதில்லை. மற்றவர்களை நம்பாத இவர்களை மட்டும் மற்றவர்கள் எப்படி நம்புவார்கள்? ஆகையால் மற்றவர்களை நம்ப வேண்டும். மறறவர்களுக்கு உதவி செய்ய வேண்டும.

கெட்டவைகளை நினைக்கவே கூடாது. கெட்டவைகளை நினைப்பவர்களில் தாம் பலருக்குத் தூக்கம் வருவதில்லை. தூக்கம் இலலாமல் தவிப்பவர்களுக்கு நடுநிலையாளர் அறிவுரை கூறுகிறார். நம்மைச் சோந்த, நமக்குத் தெரிந்த யாராவது சிலருக்கு ஏதாவது உதவி செய்ய வேண்டும். அல்லது அவர்கள் பாராட்டும்படி நாம நடந்து கொள்ள வேண்டும் என்ற எணணத்துடன் இதைப்பற்றியே கற்பனைகள் செய்துகொண்டு தூங்க முயற்சி செய்தால் பத்தே நாடகளில் தூக்கமின்மை என்னும் நோய் நீங்கி ஆழ்ந்த தூக்கம வரும்!

மற்றவர்களை ஏமாற்றவோ, மற்றவர்களை நம்பும்படி செய்யவோ நாம் மகிழ்ச்சியுடன் இருப்பதைப் போல் நடிக்கக் கூடாது. உணமையிலேயே நம் மனத்துக்கு நாம் மகிழ்ச்சியுடன் இருக்கிறோம் என்று பளிச் சென்று தோன்ற வேண்டும்!




அனைவருக்கும்
ஆனந்தம் அளிப்பது
காளி
மார்க்
காளி மார்க்
Kali mark
ஸ்டுடியோ 'செட்'டில்
அனைவரையும்
ஆட்டிவைக்கும்
டைரக்டரையும்
ஆட்கொள்வது
காளிமார்க் பானம்.
ஆயிரக்கணககானவர்கள்
காளிமார்க்கின் குளிர்ந்த.
புதுமை மாறாத, ருசியை
அனுபவிககின்றனர்.
நீங்களும் உங்கள் தாகம்
தணிய காளிமார்க்
பானங்கள் அருந்துங்கள்.
50 ஆண்டுகளாகப் புகழ் பெற்றவை. எங்கும் கிடைக்கும்.

சுவர்ச்சலை



திரு முருக
கிருபானந்தவாரியார்

''குருடுங் குருடில்லாதவனுமான
கொழுநனை விரும்பிய
கொம்பனாள்''

தேவலர் என்று ஒரு பிரம்ம ரிஷி இருந்தார். அவர் சகல சாத்திரங்களையும் நன்கு ஆராய்ந்தறிந்தவர். தவமே தனமாகக் கொண்டவர். எப்பொழுதும் ஈசுவர தியானத்திலேயே இருப்பவர். அவருக்கு இலக்குமி போன்ற எழிலும், நல்ல கீர்த்தியும், இனிய குரலும் உடைய சுவர்ச்சலை என்னும் ஒரு பெண் இருந்தாள். அப்பெண் விவாகத்திற்குரிய பருவத்தையடைந்ததும் தந்தையான தேவலர், மகளுக்கேற்றபடி வேதங்களையுணர்ந்தவனும் பெரிய தவசிலாக்கியனும், சாந்த சீலனுமான வரன் எங்குக் கிடைப்பானென்று சிந்தித்துக் கொண்டிருந்தார்.

அவருடைய எண்ணத்தையறிந்த சுவர்ச்சலை, ''தவத்திற் சிறந்த தந்தையே! குருடுங் குருடில்லாதவனுமான கொழுநனுக்கு என்னைக் கொடுக்க வேண்டும், இதனை மறுக்க வேண்டாம். இது என்னுடைய விருப்பம்'' என்று இரகசியத்திற் சொன்னாள். அதனைக் கேட்ட தந்தை, ''குழந்தாய்! உன்னுடைய இந்த விருப்பம் நிறைவேற்றக்கூடியதன்றென எனக்குத் தோன்றுகிறது. குருட்டுத் தன்மையென்றும் குருட்டுத் தன்மையில்லாமையென்றும் சொல்லும் இவ்வார்த்தை எனக்கு விகாரமாக இருக்கிறது. அழகிய கண்ணுள்ளவளே! பித்துக் கொண்டவள் போல் அமங்கலமான வார்த்தையைப் பேசுகிறாய்'' என்றனர். சுவர்ச்சலை ''அப்பா! நான் பித்துப் பிடித்தவளல்லேன். கூர்த்த மதியைக் கொண்டே கூறுகிறேன். யான் கூறிய இலக்கணமுடைய பதி என்னைக் காப்பாற்றுவார். அந்தணர்களை இவ்விட மழைத்து வாரும். அவர்களுள் எனக்கு விருப்பமான நாயகனை வரிக்கிறேன்'' என்றாள்.

முனிவர் அவ்வாறே செய்கிறேன் என்று கூறி மாணவர்களை நோக்கி, ''சீடர்களே! வேதாகமங்களை நன்கு பயின்றவர்களும் ஆசாரமுடையவர்களும் குலத்திலுயர்ந்தவர்களும், தாய் வழியாலுந் தந்தை வழி

யாலும் பரிசுத்த முடையவர் களும், நோயற்றவர்களும், அழகிற் சிறந்தவர்களும், பிரம சரியம் முடிந்தவர்களும, புத்தி, சீலம், பலம், குணம் ஆகிய நற்குணங்களை யுடையவர்களும், என் கன்னிகையை விவாகம் செய்ய விருப்ப முடையவர்களு மான அந்தணாகளை யழைத்து வாருங்க''ளென்ருர். அவர்கள் ஆசிரமங்களிலும், கிராமங்களிலு முள்ள அந்தணர்கள் பால் விரைந்து சென்று அறிவித் தனர்.

தேவலருடைய பெருமையை யும் தெரிந்துகொண்டு பல முனி வர்கள் தேவலருடைய ஆசிர மத்தை யடைந்தார்கள். தேவ லர் வந்தவர்களை விதிப்ப வர வேற்று, மகளை நோக்கி ''பெண் மணியே! இங்கு வந்த முனிவர் களும் முனிபுத்திரர்களும் உத்தம குண முடையவர்கள். வேத வேதாகமங்களை யுணர்ந்தவர் கள். ஆதலால் இவர்களில் தக்கவனை வரிப்பாயாக''வென்ற னர். உருக்கிய தங்கம் போன்ற மேனியுள்ள அவ்வுத்தமி, அவ் வந்தண சபையைப் பார்த்து வந்தனஞ்செய்து ''இந்தச் சபை யில் பொட்டையும் பொட்டை யில்லாதவருமான பிராம்மண ரிருப்பாரேயாமாகில் அவரே எனக்குப் பதி'' என்று கூறி ஞள். வெவ்வேறு தேயங்களில் இருந்துவந்த அம்மறையவர்கள் சுவர்ச்சலையின் வசனத்தைக் கேட்டு, ஒருவரை யொருவர் பார்த்துக்கொண்டு அவளை யறி வில்லாதவளென்று நினைத்து தேவல முனிவரை மனத்தில் இகழ்ந்து கொண்டு கோபித்து வந்த வழியாய்த் திரும்பிச் சென்ருர்கள்.

பின்னர் ஒரு காலத்தில் நீதி நெறியில் நின்றவரும், சதுர்வேத பண்டிதரும், நற்குணங்களுக் குறைவிடமானவரும், பிரமசரிய முள்ளவருமான சுவேத கேது என்னும் தவமுனிவர் இவ்வர லாற்றைக் கேட்டு, ஆதரவுடன் கன்னிகையை விரும்பி வேக மாகத் தேவலரிடம் வந்து சேர்ந் தனர். உத்தாலக புத்திரராகிய அச் சுவேதகேதுவைக் கண்டு தேவலர் முகமன் கூறி இருக்கச் செய்து மகளை நோக்கி, ''பாக் கியவதியே! அறிவுள்ளவர்களிற் பெரியவரும், வேதவேதாகமங் களில் கரை கண்டவரும், பெரிய அறிவுள்ளவர்களிற் பெரியவரு மான இம்முனிபுங்கவரை வரித் துக்கொள்'' என்றனர். சுவர்ச் சலை அதைக் கேட்டுக் கோபங் கொண்டு முனி புத்திரரை நிமிர்ந்து பார்த்தாள். மாதவ ராகிய சுவேதகேது, அக்கன்னி கையை நோக்கி மொழிவாரா யினர்.

''மாதரசியே! நான் உண்மை யில் குருடனுயிருக்கிறேன். எப் பொழுதும் அவ்விதமே நினைத் துக் கொண்டிருக்கிறேன். அது போல ஐயமின்றி நீண்ட கண் ணுள்ளவனுமாக என்னை அறிந்து கொள் ஆதலால் பெண் மணியே! நான் உன்னை வரிக் கிறேன். இந்த வுலகமானது எந்தக் கண்ணுல் எப்பொழுதும் பார்க்கவும் அடையவும் அது போலத் தொடவும் மணத்தை யறியவும் பேசவும் செய்கிறதோ; எந்தக் கண்ணுல் கர்மங்கள் செய் விக்கப்படுகின்றனவோ, எந்தக் கண்ணுல் மனம் சங்கல்பிக்கவும் புத்தியானது, உண்மையையறி யவும் செய்கிறதோ அவ்வித ஆத்ம ஞானக் கண்ணில்லாத வன் பிறவிக் குருடனென்று சொல்லப்படுகிருன். எந்த ஞானக் கண்ணிருக்கும்போது பார்த்தும் கேட்டும் தொட்டும் மணத்தை யறிந்தும் இவ்வுலகம் செல்லுகிறதோ, அது போல

எப்பொழுதும் எந்தக் கண்ணு டன் கூடியிருக்கிறதோ அந்தக் கண்ணனது எனக்கில்லை. ஆகை யால் நான் குருடன்! அக்கார ணத்தால் நீ என்னை வரித்துக் கொள். உலகதிருஷ்டியுடன் நித் திய நைமித்திக முதலிய கருமங் களை நான் செய்கிறேன். அவை யாவையும் ஆத்மதிருஷ்டியுடன் எப்பொழுதும் பற்றுதலில்லாமல் இருக்கும்படி செய்துகொள்ளு கிறேன். காரியமான பிரபஞ்சத் தையும் அதற்குக் காரணமான பரமாத்மாவையும் பாவித்துக் கொண்டு நான் சுமையில்லாத வனும் சாந்தனுமாயிருக்கிறேன். கருமத்தைச் செய்வதால் அழிவை விலகிக் கொண்டு வித்தையால் முத்தி ரூபமும், முத்தியே அடையப்பட்டது மான அந்த ஆத்ம ரூபத்தைப் பார்த்துக்கொண்டு இவ்வுலகில் பொருமையில்லாமல் வசிக்கி றேன். உன் எண்ணப்படி நான் உனக்குக் கணவனாக ஆகிறேன். நீ என்னை வரித்துக்கொள் என்று கூறினார்.

சுவர்ச்சலையானவள் அறிவிற் சிறந்த சுவேதகேதுவை நோக்கி, ''தவசிலாக்கியரே! நீர் மனத் தால் வரிக்கப்பட்டவராகிறீர்; மற்றக் கருமங்களைப் புரிபவர் எனது பிதா, அவரைக்கேளும். இது வேதத்தில் கூறிய விதி'' என்றனள். அதை அறிந்து அவள் தந்தையும் இந்திரியங்களை வென்றவருமான தவலர் அவ் விதமே உத்தால கருடன் சுவேத கேதுவை நன்கு பூசித்து முனிவர் களின் எதிரில் ''என்னுடைய இந்தப் பெண்ணனவள் உமக்குப் பத்தினியாக இருக்கட்டும், உம் முடன் சேர்ந்து தருமங்களைச் செய்யும் பத்தினியாக அழகுள்ள கன்னிகையை உமக்குத் தருகி றேன்'' என்றுரைத்து சுவேத கேதுவுக்குத் தன் கன்னிகை யைக் கொடுத்தார். சுவேத கேது சுவர்ச்சலையைப் பெற்றுக் கொண்டு விதிப்படி விவாகம் புரிந்துகொண்டு இல்வாழ்க்கையி லிருந்தார்.

பின்னர் தன் பத்தினியை நோக்கி, ''கட்டழகிற் சிறந்த காரிகையே! வேதங்களிற் சொல் லப்பட்ட கருமங்களனைத்தையும் என்னுடைய தரும பத்தினி யாகிய நீ என்னுடன் கூட நியா யப்படி செய். நான் என்கிற எண்ணத்துடன் நான் இருக் கிறேன் அதுபோலவே நீயும் இருக்கிறாய் ஆதலால் கருமங் களைச் செய்; நானும் உன்னுடன் செய்கிறேன். அதன் பிறகு என் னுடைய தன்றென்ற எண்ணத் துடன் அந்தக் கருமங்களை ஞான மென்னுந் தீயினால எரிக்கவேண் டும். இவ்விதம் எப்பொழுதும் உன்னாலும் என்னாலும் செய்ய வேண்டும். பரமாத்மாவினது சொரூபத்தை அறிவினாலுணர வேண்டிய, அவரை ஆதித்தனும், அக்கினியும் வாயுவும், அறிகிற திலலை அந்தப் பரமாத்மாவால் உலகம் நிறைந்திருக்கிறது. அவர் இந்த மனத்தில் இருந்து கொண்டு விளங்குகிறார்'' என்று சொன்னார்.

இவ்விதம் நாயகனால் உபதே சிக்கப்பட்டு மகிழ்ச்சியுற்ற சுவர்ச்சலை எப்பொழுதும் அவ ருக்குப் பணிவிடை செய்து கொண்டு தத்துவ ஞானத்தை யறிந்தவளுமாயிருந்தாள். அத் தம்பதிகளிருவரும் நித்திய நைமித்திக கருமங்களை எப் பொழுதும் நடத்தி எங்கும் நிறைந்துள்ள பரமாத்மாவிடம் கருமங்களை அர்ப்பணஞ் செய்து சந்ததிகளை விருத்தி செய்து நெடுங்கால மிருந்து உத்தம கதி யைப் பெற்றார்கள்.